Registered No. M. 329.

Vol. I. **November & December 1902.** **Nos. 7 & 8.**

THE

SUGUNA SUNDARAM.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

CONTENTS.

1. Atheism and its Confutation by Ganasa Ariar 147
2. Anavadhya 156
3. Veeramachampatti Subbier, Darmakarta, Toraiyur, Dhevastanam (T. P. V.) 159
4. The Indian National Congress... 161
5. Subhashani, by T. P. Viswanatha Pillai 165
6. Proceedings of the Teachers' Association, Turaiyur ... 167
7. Grant-in-Aid Code, 1902-03 ... 169
8. Invaluable Hints for Document Writers 169
9. Election of Darmakarta (T. P. V.) 174
10. Perumal Thirumoli 177
11. Roofs (S. A.) 182
12. General News 186
13. Hints on Sanitation 187
14. Education of State Children ... 189
15. An Erroneous Idea (for children) 192

அட்டவணை.

1. சா (चा) ர்வாக மதமும், அதன் கண்டனமும் (கணேச ஆரியர் ... 147
2. அநவத்யா ... 156
3. துறையூர் தேவஸ்தானம் தர்மகர்த்தா வீரமாச்சாம்பட்டி சுப்பய்யர். (டி. பி. வி.) ... 159
4. இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபை ... 161
5. சுபாஷணி (டி. பி. விசுவநாத பிள்ளை) ... 165
6. துறையூர் உபாத்திமார் சங்கத்தின் தீர்மானம் ... 167
7. உதவிக்கிராண்டு சட்டம் 1902-03. 169
8. தஸ்தாவேஜு எழுதுகிறவர்கட்கு வேண்டிய குறிப்புக்கள் ... 169
9. தர்மகர்த்தா நியமனம் (டி.பி.வி) ... 174
10. பெருமாள் திருமொழி ... 177
11. கூரைகள் (எஸ். ஏ.) ... 182
12. சமாசாரக் குறிப்புக்கள். ... 186
13. சுகாதாரக் குறிப்புக்கள் ... 187
14. இராஜமைந்தர்களின்கல்விப்பயிற்சி 189
15. ஒரு தப்பான எண்ணம். (சிறுவர்கட்கு) ... 192

Published by

T. S. SUBBARAMA AIYER, *Inamdhar*,

TURAIYUR.

All Rights Reserved.

Printed at the "Minerva" Press, by Thompson & Co., Broadway, Madras.

சனவான்களே,

ஆரியமு மாங்கிலமு மாசறு தென்னாட்டிலமுஞ்
சீரிய நந்தமிழைச் சீரியே—பூரியரின்
வந்து * நலியவய மிழந்ததைத் தமிழீர்
முந்துமின் காப்பமுயன்று.

இத்தேயத்தில் சிருட்டிகாலந்தொடங்கிப் பெருமை பெற்று வழங்கிவரும் நமது தமிழ்ப்பாஷை சிவபெருமான் முருகக்கடவுள் முதலிய தேவர்களாலாராயப்படும் தெய்வீகமுடையதாயும், அகத்தியமுனிவர் அதங்கோட்டாசான் முதலிய இருடிகட்கினிமைதோன்றுஞ் சொன்னயமுடையதாயும், பொய்யடிமையில்லாத புலவராதி நல்லறிவாளர் வினைத்தாடிப் போதுபோக்க விரும்பப்பட்டதாயும், சேரசோழபாண்டியரென்னுந் திருந்தலர்கடந்த பெருந்தகையரசகோளரிகளாற் கண்ணையிமைகாக்குமாறுபோற்பிரிந்து காக்கப்படுவதாயுமிருந்ததற்குக் கால வேறுபாட்டால் ஆரியமோர்பாலும் ஆங்கிலமோர்பாலுமாய் வின்று நெருக்குதலின், அவைகட்கிவ்விடத்தைத் தத்தம்பண்ணிவிட்டுப் புறம்போகத் தலைப்படுகின்றது. சிலகாலத்துக்குமுன் ஐதராலிமுதலிய மகம்மதியவரசர்களால், நமதுநாட்டார் தங்கள் சுதந்திரங்கெட்டுச் செல்வங்களையும், புராதன தமிழ்நூல்களாகிய கல்விகளையுமிழந்தார்போல நமது தமிழ்பாஷையும் வேற்றுநிலத்துப் பாஷைகளாற்றனது சொல்லின்பம் பொருளின்பங்களை யிழக்கப்போவதாயிருக்கின்றது. புராதன தமிழ் நூல்களில் சில அம்மகம்மதியவரசர்கள் கண்கட்கு புலப்படாமல் எஞ்சியிருந்தவைகள் தற்காலத்தில் இறத்தற்கேதுவாய் நோய்கொண்டிருப்பவைகளை கண்ணுற்று மருத்துவனைப்போல் சிகிச்சை செய்துவரும் நமது கும்பகோணம் காலேஜ் தமிழ்பண்டிதர் பிரம்மஸ்ரீ உ, வே. சாமிநாதய்யர் அவர்கட்குக் கடவுள் தீர்க்காயுளையும், சரீர திடத்தையும் அருளுமாறு அக்கடவுளைத் துதிபுரிவதுடன் அவ்வய்யரவர்கள் செய்யும் நன்றியை மறவாத கடமை பூண்டிருப்போமாக.

நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் நம்மை தீயவரசரின் சிலுகுக்கிலக்காகாமல் பாதுகாப்பதுபோல நமது அரிய தமிழ்பாஷையையும் அக்கவர்ன்மெண்டார் தங்கள் கருணை நிறம்பிய கடைக்கண்களாற் பார்த்தளிக்குங்காறு மித்தமிழை இயன்றவரை நாம் அபிமானிக்கக் கடமைப்பட்டிருத்தலின் இதற்குச்சாதகமாயுள்ளவை தமிழ்ப்பத்திரிகைகளேயாம்.

இப்போது வழங்கிவரும் தமிழ்பத்திரிகைகளுள் இச்சுகுணசுந்தரமும் ஒன்றாய் 1902௵ மே௴ முதல் துவக்கி நடத்தப்பட்டு வருகிறது. இது இந்நாட்டில் நிலைபெற்று உலாவுதற்பொருட்டுத் தத்தமக்கியன்ற நன்கொடையளிக்கவும் இப்பத்திரிகைகளைத் தருவித்து அபிருசியுடன் வாசிக்கவும், இதன்கண்ணுள்ள விஷயங்களின் உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக்கூறவும், புத்திமான்களாகிய கனதனவான்களை வேண்டுகின்றோம். இப்பத்திரிகையுடனனுப்பப்படும் "நன்சொடை" (Donation) பாரத்தில் அவரவர்கள் அளிக்கப்படும் நன்கொடை (Donation) விவரத்தை எழுதியனுப்பப்படுமாகில் அதனையிப்பத்திரிகையின் நிலைபேறுக்குச்சாதகமாய் நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளப்படுவதோடு அக்கொடையாளிகளை இப்பத்திரிகையிலும் பிரசித்தஞ் செய்யப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு, துறையூர். முசிரிதாலூகா.

---

* நலிதலாவது தமிழின்கண் அவ்வச்சொற்கள் விரவிவழங்குதல்.

உ

சுகுண சுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வால்யம் 1. 1902ஷு நவம்பர், டிசம்பர்மீ. நெ. 7, 8.

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.	3	0	0	
Half Yearly	,,	,,	1	12	0
Single Copy	,,	,,	0	5	0
Back numbers	,,	,,	0	6	0

Foreign Subscriptions 6 s. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entile them to the discount aforesaid.

A copy will be sent free to those who contribute articles to the journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

சந்தாவிவரம்.

ஷு 1-க்குதாபாற்கூலிஉள்பட		ரூ.	3- 0-0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12-0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0- 5-0
பழயபிரதி	,,	,,	0- 6-0

இப்பத்திரிகைக்கு மேமீ முதல் சந்தாக் கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத் தொகையை முன்பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணா 8-ம், ஆறுமாதச் சந்தாவில் அணா 4-ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய்ச் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒருமாதத் தவணையுங் கொடுக்கப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனாமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்தப்பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்த யோக்யதையுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக் கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந் தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதி யனுப்பினோர் அனுமதியை எதிர்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவறிப்போகும் நெம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்குக் கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்பட மாட்டா.

மானேஜிங் புரோப்ரைட்டர்,
சுகுண சுந்தரம் ஆபீசு, துறையூர்.

அறிவிப்பு.

சுகுணசுந்தரப் பத்திரிகாபிமகனிகட்குத் தெரிவித்துக் கொள்ளுவதாவது:— இச் சுகுணசுந்தரப் பத்திரிகைப் பிரசுரித்துவந்த 'திருச்சிஞப்பள்ளி 'டாட்ஸன் அச்சாபீஸர்களி'டம் போதுமான அச்சுயந்திரங்களில்லாமையால் இப்பத்திரிகையை மாதந்தோறும் குறித்த காலத்தில் பிரசுரித்துக் கொடுக்கக் கூடாமல் தாமதப்படுவதைப்பற்றி, பலதடவைகளில் பத்திரிகையைக் குறித்த காலத்தில் வெளியிடக் கேட்டுக்கொண்டும், வாய்மொழியால் இசைவதே தவிர செய்கையினு லிசைவதில்லை. பத்திரிகை தாமதப்பட்டு வருவதற்காக ஜூலைமாதத்திய பத்திரிகையில் தெரிவித்துக்கொண்ட விஜ்ஞாபனத்தில் கண்ட காரணங்களுடன் இதுவுமொரு காரணமாக இருந்து, ஆகஸ்டு செப்டம்பர் மாதத்திய பத்திரிகைகளை ஒரே புத்தகமாகப் போடும்படி ஏற்பாடு செய்தும், தனித்தனியாய்ப் போட்டுவந்ததைப்பார்க்கிலும் அதிக தாமதம் பண்ணிவிட்டார்கள். இதுபற்றி இப் பத்திரிகையை சென்னை 'தாம்ஸன் கம்பனியார்' அச்சுக்கூடத்தில் பிரசுரித்துவரும்படி மாற்றப்பட்டிருக்கிறது. ஷை கபெனியார் தாமதமின்றி மாதந்தோறும் பிரசுரித்து வருவார்களென, நம்புகிறேம்.

இப்பத்திரிகை துவக்கமான 1902ஞு மேமீ முதற்சொண்டே மேற்கண்ட 'டாட்ஸன் அச்சுக்கூடத்தா'ரால் இப்பத்திரிகை தாமதப்பட்டுக்கொண்டே வந்தால், நமது கையொப்பக்காரர்கட்கு மிகுந்த அருவருப்பை யுண்டுபண்ணி அவர்களால் சந்தாக்கள் சரியாய் அனுப்பப்படாமல் எமக்கு மிகுந்த நஷ்டமும், படிச்செலவுகளும் சம்பவித்தன. பத்திரிகை சரிவர வெளிவராமையைக்குறித்து இப்பத்திரிகா நேயர்கள் நமக்கு விடுவித்திருக்கு நிருபங்களைப்பற்றி இன்னுஞ் சில விவரங்கண்டு 'திருச்சி டாட்ஸன் அச்சுக்கூடத்தாருக்'குப்பல தடவைகளில் தெரிவித்துக்கொண்டு மிருக்கிறேம். மேற்குறித்தபடி நேர்ந்த தாமதமே, 4 & 5, 6 இந்தப் பத்திரிகைகளில் கண்ட விளம்பரப்படிச் சந்தாவைச்செலுத்தாத நமது கையொப்பக்காரர்கட்கு வி. பி. தபால் மூலமாகப் பத்திரிகைகளை யனுப்பிச் சந்தா வசூல்செய்யக்கூடாத ஹேது வாயிற்று.

இனி நமது பத்திரிகை தாமதமின்றி பிரசுரமாவதில் தடையின்று. ஆகலின் நமது பத்திரிகாநேயர்கள் எட்டுமாத பாலனுன இச்சுந்தரன் முன்னுக்கு வரும் பொருட்டு தம்தம் சந்தாக்களை இனித் தாமதமில்லாமல் அனுப்பி உதவிசெய்யு மாறு வேண்டுகின்றேம். அப்படி யனுப்பாத பத்திரிகாநேயர்கள் நாம் வி. பி. தபால் மூலமாய் அனுப்பும் அடுத்த பிரதியை தயவுசெய்து ரூ. 3—1—0. கொடுத்துப் பெற்றுக்கொண்டு இக் குழந்தைப்பருவமுள்ள சுந்தரனை யாதரிப்பார்களென நம்புகிறேம்

சில கனவான்கள் நமது பத்திரிகை அதிக சந்தா வுள்ளதென அபிப்பிராயம் கொண்டிருப்பதாயும் தெரியவருகிறது. அக்குறையை நிவர்த்திசெய்ய, நமது அடுத்த வாலியம் துவக்கமான 1903ஞு மேமீ முதல், பிரதி 1-க்கு 24-பக்கமாயிருப்பதை, இப்போதுள்ள சந்தாவுககே 30-பக்கங்களுள்ளதாகச் செய்யத் தீர்மானித்திருக்கிறேம். ஆகையால் நமக்கு அடுத்தவருஷத் துவக்கமான மேமீ முதலுள்ள ஒரு வருஷத்தியச் சந்தாவை 1903ஞு மே, ஜூன் மாதங்களுக்குள் ரூ. 2—8—0. வீதம் செலுத்தி நமக்கு மிகுந்த உதவிசெய்யவேணுமாய்க் கேட்

டுக்கொள்ளலாயிற்று. ஜன்மாஸத்துக்குப் பிற்பட்டு அனுப்புவோர் ரூ. 3—0—0 வீதம் அனுப்பல் வேண்டும். இனிப் பத்திரிகையை வருஷ மத்தியில் நிறுத்தக்கூடாது. நிறுத்த விரும்புகிறவர்கள் வருஷாரம்பத்தில் அதாவது அடுத்த மேமாதத்திலேயே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படிக்கின்றி வருஷ மத்தியகாலத்தில் நிறுத்த விரும்பினல் அந்த வருஷ முழுவதற்கு முள்ள சந்தாவை வசூலிக்க எமக்கு சுதந்திரமுண்டு.

சுகுணசுந்தரம் ஆபீசு, துறையூர். } T. S. S.

शुभमस्तु ॥

गजाननायनमः ॥

सम्फुल्लाम्भोजिनीदम्भा लम्भसंरंभभृत्प्रभा ।
भावुकायपरादेवी शाम्भवीभोगवीतुनः ॥

சா (சா) ர்வாக மதமும், அதன் கண்டனமும்.

"योब्रम्हाणं विदधातिपूर्वं, योवैवेदांश्च प्रहिणोतितस्मै ॥"

என்று கூறியபடி, ஜீவகாருண்யரான ஈசுவரர் ஸ்ருஷ்டியாதியில் பிரமனை ஸ்ருஷ்டித்து, பிரமனுக்கு வேதங்களை யுபதேசித்து, இதனால் உலகங்கள் நற்கதி யடையட்டுமென, வருள்புரிய, அவ்வேதங்களைப் பிரமதேவன் இருடிகளுக் குபதேசிக்க, இருடிகளுள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய வேதவியாஸ பகவான் வேதார்த்தங்களையும், பின்னுமனேக நீதிகளையும் விளக்கக்கூடியவைகளான இதிஹாஸங்களையும், புராணங்களையு மியற்றினர். வேதங்கள் முறையே பூர்வ பாகமும் இறுதி பாகமும், கருமகாண்ட மெனவும், ஞானகாண்டமெனவு மிருவகைப்படும்; கருமகாண்டமானது தருமார்த்தகாமமென்னு மூன்று புருஷார்த்தங்களையும் அடையும் வழியைக் கூறுகிறது: ஞானகாண்டமானது, புண்ணிய கர்மங்களால் சித்த சுத்தி வந்த பிறகு, முன் கூறிய மூன்று புருஷார்த்தங்களினின்றும் ஒழிவடைந்து, ஓர் சத்குருவைச் சார்ந்து, அவரால் வேதார்த்தங்களை யுபதேசிக்கப்பெற்று அவ்வர்த்தானு சந்தானத்தினுல் சர்வ கரும பிரவர்த்தகங்களாகியவும், அக்கர்மங்கட்குரிய பலன்களை யனுபவிக்கத்தக்க ஜன்மங்களுக்கும் ஹேதுவாகியதுமான நான், எனது என்னுமத்தியாஸங்களை நசிக்கச்செய்து, நித்திய ஞானனந்தமாகிய பிரமமே யானென வபரோக்ஷமா யனுபவித்து, பிராரத்வம் முதலான மூன்றுவித கருமங்களையும் நசிக்கச்செய்து, ஜனனமரணப் பிணியைக் கருவறுக்கும் முக்தி யென்னும் பெரும் பதவியை அடையத்தக்கவழியைக் கூறுகிறது. இவ்விதம் நம்மாரிய மதத்தின் வழிச்சென்று, அநேகர்கள் முன் யுகங்களில் முக்தியடைந்த

வர்கள், பிறகு இக்கலியுகத்தில், சா (चा) ர்வாகர், புத்தர் முதலாயப் புற
மதத்தவர்கள் தழைத்தோங்கி, ஆரிய மதத்தை யடக்கித் தங்கள் மதங்
களை யோங்குவித்து, தேவர்கட்குரிய உணவை யிழக்கும்படி செய்ய,
தேவர்கள் ஈசுவரனிடத்தில் ஸ்துதி பூர்வமாய் ஆரியமதக் குறைவை
விக்ஞாபனஞ் செய்துகொள்ள, ஈசுரவன் இத்தெக்ஷிண பூமியில், கே
ரள தேசத்தில் சசலமல்லது காலடி யென்னுமோர் அக்கிரகாரத்தில்
புத்திருக்கென அருந்தவம் புரிந்து வந்த சிவகுரு வென்னும் வேதி
யர்க்குப் புத்திரராய் அவதரித்து, சங்கரரென நாமம் வகித்துச் சௌ
ளோப நயநம் முதலியச் சடங்குகளைப்பெற்று, பிறகு கோவிந்த பகவத்
பாதரென்னுமொரு துறவியி னுபதேசத்தால் துறவறம் பூண்டு, எல்
லா தேசங்கட்குஞ்சென்று ஆங்காங்குள்ள புறமதங்களைக் கருவறுத்து
ஆரிய மதத்தை நிலைநாட்டி, ஆங்காங்கு ஆரியமதத்திற்கென வநேகஞ்
சிஷ்யர்களை நிறுத்தி வேதவியாஸ பகவானால் பூர்வ மியற்றப்பட்ட பிரம
சூத்திரத்திற்கும், சில உபநிஷதங்கட்கும் பாஷியங்களை யியற்றிக் கயிலை
யடைந்தனர். பின்னர், சில வருஷங்கள் கழித்து ஸாயண மாதவாசா
ரியரென்று மறு நாமம் வழங்கும் வித்யாரண்ய சுவாமிகள் என்றொரு
வர் இனி எக்காலத்திலும், புறமதங்களைக் கிளைக்காதிருக்கவென, புற
மதங்களெல்லாவற்றையும் அவைகளிலுள்ள யுக்தி அநுபவ முதலான
வைகளால் அறியப்படுஞ் சில குற்றங்களையும் பற்றி சங்கிரகமாய்ச் "சர்
வதர்சன ஸங்கிரகம்" என்னுமொரு கிரந்தத்தை எழுதினார். அதைத்
தமிழில் மொழிபெயர்த்தால் தற்காலங் கிளைத்துவரும நாஸ்திகம் அல்
லது சா (चा) ர்வாக மதமும் மற்றுஞ்சில மதங்களும் வேரறுந்து போ
குமென நினைத்து அப்புறமதங்களையும், அவைகளில் என் புல்லறிவா
லியன்றவரையில் ஏற்படுத்தப்பட்ட கண்டனங்களையும், இறுதியில் நம்
ஆரிய மதத்தையும இப்பத்திரிகை வாயிலாக வெளியிடலானேன்.
" ஆரியர்காள் ! யான் கூறுவதிலுள்ள தோஷங்களைக் கவனியாமல்,

"गुणदोषौबुधोगृण्हन्निन्दुक्ष्वेलाविवेश्वरः ।
शिरसाश्लातघेपूर्वं परंकण्ठेनियच्छाति ॥ "

என்ற நியாயத்திற் கிணங்க குணங்களையே கண்டுகளிப்பீர்களென
நம்புகிறேன்.

சா (चा) ர்வாகர்கள் என்று சொல்லப்படும் நாஸ்திகர்கள் கூறுவ
தென்னை யெனில் :—

" ஜனங்களே ! சுகத்தை யனுபவியுங்கள். பாலியகாலமுஞ் சுகத்
தைப் பகுத்தறிவதற்குத் தக்கதல்ல ; விருத்தாப்பியமும் சரீரந்தளர்ச்சி
யடைகிறதினால் சுகத்துக்குத் தக்கதல்ல. ஆகையால், யௌவனமே
சுகமனுபவிக்கத் தக்ககாலம் ; மரணமோ இன்றைக்கோ அல்லது நா

ளைக்கோ ; மரண மடைந்தால் சரீரம் மறுபடி கிடைப்பதில்லை ; ஆதலின், ஐம்புலன்கட்கும் எங்கெங்த விஷயஞ்சுகமோ அந்தந்த விஷயங்களை யனுபவியுங்கள் ; இருக்குமளவுஞ் சுகமாயிருப்பதே நலம்;

यावज्जीवंसुखंजीवे न्नास्तिमृत्योरगोचरः ।
भस्मीभूतस्यदेहस्य पुनरागमनंकुतः ॥

வன்புபுரி கூற்றின்வயமாகுவதன் முன்னு
இன்பமுயி ருள்ளளவு மெய்துதிர் விரைந்தே ;
மின்பயிலுமங்கியிடை வெந்தவுடல் பின்னு
முன்பென வெழுந்துவர லெங்ங னுரைகிற்பீர் ?

என்று வழங்கும் உலக நியாயத்தை யனுசரியுங்கள். ஸ்திரீ போகாதிகளான சுகங்களே புருஷார்த்தம். மோக்ஷமென்று ஒன்று உண்டென்று புறமதத்தவர்கள் கூறுகிறது தெரியாததன்மைதான். அவர்கள் கூறும் லக்ஷணம்பொருந்திய மோக்ஷத்தை யனுபவித்தவர்கள் எவர்கள் ? பிரத்தியக்ஷமா யனுபவிக்கக்கூடியதும், மூடர்களுக்கும் தெரிந்தவைகளான ஸ்திரீ போக முதலியவைகளான சுகங்களைத்தள்ளி அப்பிரத்தியக்ஷமும், எட்டி யெழுதியதுமான மோக்ஷமென்று சொல்லப்படும் பொய்யை நம்பிக்காயக்லேசம்பண்ணிக்கொண்டுவாழ்நாட்களை வீணுகக் கழித்துவிடாதேயுங்கள்.

பரலோக மொன்றுண்டென மயங்கவேண்டாம். பிருதிவி, அப்பு தேயு, வாயுவென்று சொல்லப்படும் நான்கு பூதங்களின் சேர்க்கை கெடவே சைதந்யமுமழிந்து போகிறது. அழிந்துபோன பிறகு ஒவ்வொரு பூதமும் வியாபகமான பிருதிவி, அப்பு, தேயு, வாயு இவைகளைச்சாருகிறது. புறமதத்தவர்கள் கூறும் ஆகாயமென்னு மைந்தாவது பூதமொன் றெப்புக்கொள்ளக் கூடியதல்ல. பதார்த்தத்தின் அல்லது வஸ்துவின் அபாவமாகியதும், ஐம்புலன்கட்குள் ஒன்றுக்கும் புலப்படாததான ஒன்றை எப்படி நம்பக்கூடும் ? புறமதத்தவர்கள் ஆகாயமானது சப்தத்தையே குணமாகவுடைய தாகையால் அவசியம் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான் என்கிறார்களே என்றால் கூறுவாம் : ஒரு பாத்திரத்திற்குள் ஓர் மணியைப்போட்டு அதை நன்றாய் மூடிவிட்டசைத்தால் அப்பாத்திரத்திற்குள் ளுண்டாகும் நாதம் நமக்குப் புலப்படுகிறது; அதே பாத்திரத்திற்குள்ளிருக்கும் காற்றை யிழுக்கும் யந்திரத் (Air pump) தினல் வெளியிழுத்துப்பிறகு, அசைக்க நாதம் புலப்படுகிறதில்லை ; ஆகையால், காற்றிருந்தால் நாதம் புலப்படுவதும், அஃதில்லாவிட்டால் நாதம் புலப்படாததும் பற்றி நாதமானது வாயுவின் குணமே யொழிய ஆகாயத்தின் குணமல்ல. ஆகாய மொன்றுண்டென்பதும், சப்தம் அதின் குணமென்பதும் அயுக்தமே யொழிய வேறில்லை.

தேகாகாரமாய்ப் பரிணமித்த பிருதிவியாதிகளான் நான்கு பூதங்களின் சேர்க்கை விசேஷத்தாலேயே தென்னம்பூ முதலான சேர்க்கை விசேஷத்தால் மதசக்தி யுண்டாகிறதுபோல சைதன்னியசக்தி யுண்டாகிறது; அப்பூதங்களின் சேர்க்கைகெட்டால் சைதன்யசக்தியு மழிந்துபோகிறது. ஆகையால் சைதந்யத்தோடு கூடின தேகமே ஆத்மா; புறமதத்தவர் கூறும் அநுமான பிரமாணத்தால் தேகத்தைத் தவிர ஆத்மாவென்றொருவன் இருக்கிறனென்று ஏனறியக்கூடாதென்றால், அப்பிரமாணமானது பின் எழுதும்அனேக தோஷங்களை யுடையதாகையால் அதை பிரமாணமாக ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. சைதன்ய சக்தியுடன் கூடிய தேகத்தைத்தவிர ஆத்மா வொருவனை எவன் பார்த்தவன்?

முற்கூறிய ஸ்திரீபோகம் முதலான சுகங்களைச் சிரேஷ்டமான புருஷார்த்தமாக ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. ஏனென்றால், அச்சுகங்கள் கேவலம் சுகமாயிராமல் துக்கங்களோடு கூடியிருக்கின்றனவே யென்றால், கூறுவோம. செம்படவன் மத்ஸ்யங்களை விரும்பி வீசும் வலையில் வரும் மத்ஸங்களை கிரகித்துக்கொண்டு அம்மத்ஸயங்களோடு கூடவரும் மண் கல் முதலானவைகளைத் தள்ளுவதுபோல துக்கத்துடன் கூடியிருந்தாலும், சுகத்தையே யனுபவித்துத் துக்கத்தை யனுபவிக்காமல் தள்ளுவதே புத்திமான்களுக்கு லக்ஷணம்.

"त्याज्यंसुखंविषयसंगमजन्मपुम्साम्
दुःखोपसृष्टमितिमूर्ख विचारणैषा।
व्रीहिन्जिहासति सितोत्तमतण्डुलाढ्यान्
कोनामभोस्तुषकणोपहितान्हितार्थी ॥"

நெல்லினுமி யுள்ளதென நீக்கநினை கிற்கும்
புல்லியர்க ளிவ்வுலகி லில்லை யதனாலே
சொல்லரிய வின்பமொடு துன்பமுள வேனும்
நல்லறிஞ ரின்பநனி துய்ப்பநசை கொள்வார்.

விஷயாதிகளால் உண்டாகுஞ் சுகத்தை துக்கத்துடன் கூடியிருக்கிறதாகையால், இதை விரும்பக்கூடாதென்று தள்ள நினைப்பவன் மூடனே; சிலாக்கியமான நெல்லை உமியுடன் கூடியிருக்கிறதாகையால் இதை விரும்பக்கூடாதென்று எவன் தள்ள நினைப்பான்? ஆதலின், ஜனங்களே! சுகத்தை யனுபவிக்காமல் கலங்கவேண்டாம்,

சுகத்தை யனுபவிக்கவேண்டாம், காயக்லேசத்துடன் தவம் முதலானவைகளைச் செய்தால் மறுபிறப்பில் சுகப்படலாம்; அப்படியிராவிட்டால், அனேக தனச்செலவினாலும், சரீரச்சிரமத்தினாலும் ஆகக்

கூடிய அக்நிஹோத்திர முதலிய கருமங்களில் மகாமேதாவிகளும், பெரியோர்களுமான அனேகர்கள் பிரவர்த்திப்பார்களா வென்றால் கூறுவோம்.

"अग्निहोत्रंत्रयोवेदा स्तृदण्डंभस्मगुण्ठनं ।
बुद्धिपौरुषहीनानां जीविकामात्रनिर्मिताः ॥ "

மும்மைமறை மும்மை மணிமாலை திருநீறு
செம்மையொளி வீசுமெரி செய்மக மிதெல்லாம்
அம்மையென வொன்றுள தெனக்கொளறி வீலனர்
இம்மைவழிதே பொழுது போக்கு மியல்பன்றே.

என்று பிரஹஸ்பதி பகவான் கூறியபடி பெரியோரென்று சொல்லிக்கொண்டு ஜீவனம் பண்ணுவது மூடர்கட்கேற்பட்ட வழியேயொழிய வேறில்லை; தவிர, அக்நிஹோத்திர முதலான கருமங்களை விதிக்கும் வேதத்திலேயே கருமகாண்டமானது கருமகாண்டத்தினாலேயே புருஷார்த்தமாகையால் கருமங்களைச் செய்யவேண்டுமெனவும், ஞானகாண்டமானது ஞானத்தினாலேயே மோக்ஷமாகையால் ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு வேதாந்தத்தை யறியவேண்டுமெனவும், புராண இதிகாஸங்கள் விக்கிரகாராதனம் முதலான ஸகுண உபாஸனைகளையே செய்வதனாலேயே மோக்ஷமெனவும் ஒன்றிற்கொன்று விரோதமாகிறபடியால் வேதத்தையும் பிரமாணமாக ஒப்புக்கொள்ளக் கூடியதில்லை. ஆகையால் வியாதி முதலானதுகளாலும், துஷ்டர்களாலும் ஸம்பவிக்கும் துக்கங்களே நரகங்கள்; இவ்வுலகையாளு மரசனே ஈசுவரன்; மரணமே மோக்ஷம்; தேகமே ஆத்மா: இவ்விஷயத்தில் நான் உயர்ந்தவன், நான் பெருத்தவன், நான் இளைத்தவன் என்னு மிவ்விதமான அனுபவமே ஹேது. என்னுடைய கைகள், எனது கால்கள், என் தலை என்னு மிவ்விதமான வனுபோகத்தால் தேக வியதிரிக்தனான ஆத்மாவொருவனிருக்கிறதாக அறியப்படுகிறதே யென்றால், கூறுவோம்:—இராகுவானவன் தலையையே உடலாக உடையவனாகயிருக்க ராகுவினதுதலை என்னும் வியவகாரம்போல், இவ்வியவகாரமும் ஔபசாரிகமே என்பதில் ஐயமில்லை.

இது வரையில் எழுதிய சா (चा) ர்வாக மத விஷயங்கட்கு கண்டனத்தை யெழுதிப்பிறகு சா (चा) ர்வாக மதத்தின் பின் பாதியை எழுதுவாம்.

சா (चा) ர்வாக மதத்தின் கண்டனம் யாம் கூறுகின்றோம்:—எது சிரேஷ்டமான புருஷார்த்தமோ, அது யாவர்களாலும் வெறுக்கக் கூடியதா? வெறுக்கக்கூடாததா? வெறுக்கக்கூடியதாகில் அது சிரேஷ்டமான புருஷார்த்தமல்ல வென்பதில் ஐயமென்ன? சிரேஷ்ட

மாகிய புருஷார்த்தத்தை எவன்தான் தள்ள விரும்புவான்? வெறுக்கக் கூடாதது என்றால் அது உலகானுபவத்திற்கு விரோதம். அதாவது, நீ கூறிய புருஷார்த்தமான ஸ்திரீ போகத்தையும், வெறுத்துத் தள்ளியே ஸுஷுப்தி யவஸ்தையை விரும்புகிறார்களல்லவா? அவ்வவஸ்தை தெளிந்து விழித்தவுடன், நான் பிரமானந்தமாய்த் தூங்கினேன் என்கிறார்களே! ஒன்றையு மறியாத ஸுஷுப்தி அவஸ்தையில் சுகமெங்ஙனம்? அதாவது, மனதிற்கு மிந்திரியங்கட்கும் வியாபாரமற்றிருப்பதே சுகம்; ஆகையால் நீ கூறிய சுகமே புருஷார்த்த மென்பதல்ல.

இவ்வுலகிலிருக்கும் ஜீவராசிகள் ஏன் ஒரேநிலைமையிலிருக்கக்கூடாது? சிலர் வியாதி முதலியதுகளால் பீடிக்கப்பட்டவர்களாயும், சிலர் பிறவியான அங்கஹீனத்தால் கிலேசப்பட்டவர்களாயும், சிலர் துக்கிகளாயும், சிலர் சுகிகளாயு மிருப்பானேன்? அவரவர்கள் முன் பிறப்பில் செய்த கருமங்களே இப்பிறப்பில் பயன்களைக் கொடுக்கின்றன வென்பது திண்ணம். தவிர துக்கத்தை யனுபவிக்கும் பொழுது, நான் முன் பிறப்பில் அனேக பாவகருமங்களைச் செய்திருந்தேன் அவைகளின் பயனாகிய துக்கத்தை யனுபவிக்கிறேன் என்றும், அவ்வாறு சுகத்தை யனுபவிக்கும்பொழுது, அவர்களை நோக்கி அவர்கள் முன் பிறப்பில் புண்ணிய கருமங்களைச் செய்தார்கள், அவைகளின் பயனாகிய சுகத்தை யிப்பொழுது அனுபவிக்கிறார்கள் என்னு மிவ்விதக் கொள்கையினாலே ஆத்மா நித்யன்; முன் பிறப்பு முள்ளதுதான்; இனி மறுபிறப் புண்டாகலாம்; என்ற இம்மூன்று விஷயங்களும் நிச்சயமேதான்.

ஆகையால் இந்திரியங்களையும், மனதையும அவைகளின் போக்காகவே செலுத்தினால் அதிக்ரூரங்களான பாவகருமங்கள் ஸம்பவிக்க, அக்கருமங்கள் அச்சீவனுக்கு அனேகம் ஜன்மங்களையளிக்க கர்ப்பவாஸ துக்கங்களையும், வாழ்நாட்களில் ரோக முதலியதுகளால் வரும துன்பங்களையும், மரண துக்கங்களையும், நரகத்துன்பங்களையும் அனுபவிக்கும்படியாகும். ஆகையால் புலன்களை யடக்குவதேநலம்.

ஆகாய மென்றைந்தாவது பூதமொன்றுள்ளதென்பது நிச்சயம். உலகத்தி லொவ்வொரு காரியத்திற்கும் மூன்றுவித காரியமுள. அவற்றில் ஒன்று குறைந்தாலும் காரிய முண்டாகாது. அஃதெங்ஙனமெனில்:— வஸ்திரம் ஒரு காரியம்; அதற்கு நூல்கள் ஒரு காரணம்; சேணியனும் தறி முதலானதும் ஒரு காரணம்; மற்றொரு காரணம், நூல்களின் சேர்க்கை. இம்மூன்றுள் ஒன்றில்லாவிடின் காரியமாகிய வஸ்திர மெப்படி உண்டாகாதோ, அதுபோலவே சப்தமுண்டாவதைக் குறித்து அதன் மூன்று காரணங்களில் வாயுவாகிய ஒரு காரண மில்லாவிடில் காரியமாகிய நாதமுண்டாகாது. ஆகையால் சப்தமுண்டா

கும் விஷயத்தில் வாயுவானது காரணமே தவிர குணியல்ல; ஆகாயமே சப்தத்தின் குணி. நல்ல வாஸனையையுடைய வஸ்து ஒன்றைக் காற்று இருக்குமிடத்தில் வைத்தால் அதன் வாஸனை நமக்குப் புலப்படுகிற தில்லை. ஆகையால், அவ்வாஸனையைக் காற்றின் குணமென்று சாதிக்க மாளாததுபோலவே, சப்தத்தை வாயுவின் குணமென்று சாதிக்க முடியாது. சப்தமானது ஆகாயத்தின் குணமென்பதில் ஐயமில்லை. இவ்விதமாய் யுக்திகட்கும், சாஸ்திரங்கட்கும் இணங்கவிருப்பதைத் தள்ளி இவைகட்கு விரோதமாய் ஐந்தாவது பூதமாகிய ஆகாசமில்லை யென்னும் விஷயத்தை எவன்தான் அங்கீகரிப்பன்?

தேகாகாரமாய்ப் பரிணமித்த நான்கு பூதங்களின் சேர்க்கையால் சைதன்ய முண்டாகின்றதென்று கூறப்பட்டதல்லவா? அச்சைதன்யமானது உருவமுடையதா? உருவமற்றதா? உருவமுடையதாகில் அது ஏன் பார்க்கப்படவில்லை? சரீரத்துக்குள் ளிருக்கின்றமையால் பார்க்கப்படவில்லை யெனில், பிரத்தியக்ஷமொன்றையே பிரமாணமாகக் கூறும் நீ, அப்பிரத்தியக்ஷமான சைதன்ய சக்தியொன்றைமாத்திரம் ஒப்புக்கொள்வது உனது வசனத்துக்கே விரோதம். உருவமல்லாததென்றாலும் அதுவும் அஸங்கதம். தவிர, இச்சரீரமானது நான்கு பூதங்களுஞ் சேர்ந்துண்டானதா? அல்லது சேராமலா? சேராமலுண்டானதென்றால் உன் வசனத்திற்கே விரோதம். சேர்க்கையினாலுண்டானதென்றால், நீ கூறுஞ் சைதன்யம் எல்லா வவயவங்களினும் அல்லவா பரவியிருக்கவேண்டும்? ஒருவனுக்குச் சில அவயவங்கள் குறைகின்றனவே; அப்பொழுது நஷ்டமடைந்த அவயவங்களி லிருக்குஞ் சைதன்யம் அவ்வங்கங்களோடு கூட நசிக்கிறதா? அல்லது மற்ற நஷ்டமில்லாத அவயவங்களைச் சாருகிறதா? கூட நசிக்கிறதென்றால் உலகானுபவ விரோதம். மற்ற அவயவங்களைச் சாருகிற தென்றால் அதுவுமஸம்பவம். அதெப்படி யெனில், ஸர்வ சரீரத்திலும் வியாபித்திருக்கும் ரக்தமானது சில அவயவங்கள் சேதிக்கப்பட்டால் அவ்வவயவங்களை விட்டு மற்ற அவயவங்களை எப்படிச் சாரமாட்டாதோ, அதுபோலவே சைதன்யமும் மற்ற அவயவங்களைச் சாராது. ஆகையால் சைதன்யமானது தேகத்திலுண்டாவதில்லை யென்பதே திண்ணம். நீ கூறும் சைதன்யத்தையே யாம் மனமென்று கூறுவோம்.

தங்கமொன்று; அது எப்படி ஆபரணமென்றும், பாத்திர மென்றும், நாணயமென்றும் பலவிதமான பெயர்களைப் பரிணாம வசத்தால் உடையதோ, அப்படிப்போலவே யாம் கூறும் மனம் ஒன்று தான். அதை உபாதிவசத்தால் புத்தி, சித்தம், அகங்காரமென மூன்றுவகையாகவும் கூறப்படும். அம்மனதைத்தவிர ஆத்மா வென்றொருவன் அங்

நியன், ஸ்வப்நாவஸ்தையில் ஐம்புலன்கட்கும் வியாபாரமில்லையென்பது யாவருமறிந்த விஷயமல்லவா? அவ்வவஸ்தையில் ஜகமானது தோன்றுகிறதே; அவ்வுலகமானது மனத்தினது பரிணாமமல்லவா? ஸ்வப்நாவஸ்தை முடிந்து விழித்தவுடன், நான் இவ்விதமாகக் கனவுகண்டேனென்று விஸ்தாரமாய்க் கூறுகிறானல்லவா? உலகாகாரமாகப் பரிணமித்திருக்கும் மனதான ஸவப்நத்தைப் பார்த்திருந்தவனொருவன் அவசியமிருக்க வேண்டுமே; அவன் யாவன்? மனமா? அல்லது மனதைததவிர அன்யனா? பார்த்தது மனது தான் என்றால், நியாய விரோதமும், தவிர உலக விரோதமும் சம்பவிக்கின்றனவே, அதெப்படி யென்றால் ஸ்வப்நாகாரமாய்ப் பரிணமித்த மனதை, மனது தானே பார்க்குமா? மனது விஷயமாகையால், அவ்விஷயத்தை யறியும விஷயி ஒன்றிருக்க வேண்டும்; விஷயமும் விஷயியும் ஒன்றாகவேயிராது; எப்படி எதிரிலுள்ள வஸ்துக்களைப் பார்க்கிற நேத்திரமானது அவ்வஸ்துக்களுக்கன்யமோ. அப்படியே மனதையுமறியு மொருவன் மனதிற்கன்னியனாயிருக்க வேண்டும்; அவனையே ஆத்மா வென்று யாம் கூறுவோம். ஆகையால் தேகேந்திரிய மனோவ்ய திரிக்தனே அவ்வாத்மா.

சுகமானது துக்கத்துடன் கூடியிருந்தாலும், அத்துக்கத்தை மனதிலெண்ணாமல் சுகத்தையே எப்படி அனுபவிக்கக்கூடும்? விஷங்கலந்திருக்குங் கற்கண்டை வாயில் போட்டுக்கொண்டு கற்கண்டம்சத்தை மாத்திரம் உட்கொள்ளுகிறேன், விஷத்தை உமிழ்ந்து விடுகிறேன் என்றெவன் கூறுவான்? கூறினுமவ்விதம் நிர்வகிக்கக்கூடுமா? கூடாததல்லவா? அதுபோல சுகத்தை மாத்திரம் அனுபவிக்க வேண்டுமென்றால் அதற்கெண்மடங்கான துக்கத்தையுமல்லவோ அனுபவிக்கவேண்டி வருகிறது. தவிர, சுகம்பாபங்களுக்கு ஏதுவாக இருக்கலாம்; அப்பாபங்களின் பயனாகிய துக்கத்தை ஜந்மாந்திரங்களிலும் அனுபவிக்க வேண்டியதே. ஆகையால், விஷங்கலந்த கற்கண்டை வெறுத்துத்தள்ளுவதுபோல சுகத்தையும் விரும்பாமல், சுகதுக்க மற்றதும், நித்தியமாயுமுள்ள ஆநந்தத்தையே யனுபவிக்க விரும்புங்கள். அவ்வானந்தமானது நித்தியக்ஞானானந்தமான பிரமமே யானென்னும் பரோக்ஷமான அனுபவம். அவ்வனுபவத்தைச் சம்பாதிக்கும் வழி வேதாந்தத்தைக் கிரமமா யறிவதைத்தவிர வேறில்லை.

அவ்வேதத்திலேயே கூறிய அக்நிஹோத்திரம், வேதாத்தியயநம், விபூதி தாரணமுதலானவைகளை அனுஷ்டிக்காவிடில் சித்தசுத்தி வருவதில்லை; சித்தசுத்தி வராவிடில் பிரம்மக்ஞானம் வருவதில்லை; ஆகையால், ஆத்மக்ஞானத்திற்கு பரம்பரா சாதனமாகிய கருமத்தை யனுஷ்டிப்பது அவசியம். கருமகாண்டத்தில் கருமமே புருஷார்த்தத்தை

யளிக்கக்கூடிய தென்பதும் உசிதந்தான். தருமார்த்த காமமென்று சொல்லப்படும் மூன்றுவித புருஷார்த்தங்களும் கருமத்தால் கிடைக்கக் கூடியதுதான். ஸகுணோபாஸனையினால் மோக்ஷமென்பது முசிதந்தான்; ஸகுணோபாஸனையினால் சித்தசுத்திவர, அச்சித்த சுத்தி வந்த பிறகு வேதாந்தத்தை அறிந்தால்தான் மோக்ஷமென்பது கருத்து. மோக்ஷத்தைக் குறித்து ஸகுணோபாஸனை பாரம்பரையாகக் காரணமா யிருப்பது பற்றி, அங்ஙனங் கூறியது. புராணங்கள், இதிஹாஸங்கள் இவைகளில் ஸகுணோபாஸனை, அதாவது விக்கிரஹாராதானம் முதலா னவைகளே மோக்ஷத்தை ஸாக்ஷாத்காரமாகக் கொடுக்கிறதாகச்சொல் லுவது உண்மைதான். மனமொரு வழிப்பட்டு ஈசுவரனிட மிருக்குமா கில் அவனது அதிகமான பக்தியின்விசேடத்தால், ஈசுவரன் தானாகவே ஸத்குருவாகப் பிரஸன்னமாகிறபடியால், அவரைப்பார்த்தவுடன் அவர துதிவ்விய கடாக்ஷ விசேஷத்தால், வேதாந்தத்தைக் குருமுகமாய் அறி வதினாலே எந்தக்ஞானம் வரவேண்டுமோ, அந்தக்ஞானம் வந்து உடனே முக்தியடைகிறான். ஆகையால் ஸகுணோபாஸனையிலும் ஞானம் வந்தபிறகுதான் மோக்ஷம். ஆகலின் ஒன்றுக்கொன்றுவிரோ தமாயிருக்கிற தென்பது மிகவும் அஸங்கதம். கருமகாண்டத்திற்கும், ஸகுணோபாஸனையைக் குறிக்கும் பிரகரணத்திற்கும், ஞானகாண்டத் திற்கு மொன்றுக்கொன்று விரோதமில்லாததினால் வேதம் பிராமாணிக மென்னும் விஷயத்தில், விவாதத்திற் கிடமின்று. ஆகையால் தேகேந் திரிய மனோ வ்யதிரிக்தனாகவும், நித்தியக்ஞானானந்த மயமாகவுமிருக் கிறவனே ஆத்மா. இப்பிரபஞ்ச மிருப்பதைக் கொண்டு அனுமானத்தா லும், பெரியோர்களது வாக்கியப் பிரமாணத்தாலும், பிரபஞ்சத்திற்கு கர்த்தாவான பரமேசுவரன் ஒருவன் இருக்கவேண்டும். வேதாந்த ஞானத்தினால் கிடைக்கும் நித்தியர்ஞானானந்தமாகிய பிரம்மஸாயுஜ்ய மே மோக்ஷம்.

அத்தியாஸ மென்று ஒன்றுள்ளது. அதல்லாத வஸ்துவினிடத் தில் அதுதோன்றுவதே அத்தியாஸமென்பது. அது எப்படி யென் றால், கயிற்றில் அரவமும், கானலில் நீரும், கட்டையில் கள்ளனும் இது போன்ற தோற்றங்களே அத்தியாஸங்களென்று கூறப்படும். இது போலவே புத்திரபாரியாதிகள் சுகமாயிருக்கும்பொழுது நான் சுகி யென்றும், அவர்கள் கஷ்டப்படும்பொழுது நானே துக்கியென் றும், நான் உயர்ந்தவன் பெருத்தவன் இளைத்தவனென்றும், நான் குருடன் செவிடன் என்றும், நான் விரும்பினேன் நான் நினைத்தேன் என்றும், சொல்லுகிற வியவகாரமானது அநாதியான அக்ஞானத்தால் வந்த அத்தியாஸமே யொழிய வேறில்லை. ஏனென்றால் அஸங்கனு யும், சச்சிதானந்த ஸ்வரூபியாயும் இருக்கிற ஆத்மாவுக்கும், புத்திர

பாரியாதிகட்கும் என்ன சம்பந்தம்? அப்படியே உர்ரம், இளைத்தல் பெருத்தல் இவைகளற்றவனான ஆத்மாவுக்குத் தேகத்திலுள்ள இத்த ருமங்களொவ்வுமா? இந்திரியங்களிலுள்ள குருடு செவிடு முதலான தருமங்கள் ஆத்மாவினிடத்தில் ஒவ்வுமா? விரும்பல், நினைத்தல், ஊஹித்தல் முதலான அந்தக்கருணத்தின் தருமங்கள் முன்கூறப்பட்ட லக்ஷணத்துடன் கூடிய ஆத்மாவினிடம் ஒவ்வுமா? இவைகள் ஒவ்வவே ஒவ்வாது. எனது தலை, எனது கால்கள், எனதுகைகள் என்று தோன்றும் தோற்றமும் அத்தியாஸந்தான்; அஸங்கனான ஆத்மாவுக்கு கைகள் கால்கள் தலை இவைகளின் சம்பந்தமெப்படி ஒவ்வும்? பாஹிய தருமங்களும், தேஹ தருமங்களும், இந்திரிய தருமங்களும், அந்தக்காண தருமங்களும் ஆத்மாவினிடம் தோற்றுவது அத்தியாஸமே தவிர உண்மையல்ல. என்கைகள் என்று இதுபோன்ற தோற்றங்களும், தேக சம்பந்தம் ஆத்மாவினிடம் தோற்றுவதால் அத்தியாஸமேதான்.—இவ்வத்தியாஸங்களைத் துலைப்பதற்கு ஆரியமதமாகிய எங்கள்மதத்தை அனுசரித்தால் வேதாந்தத்தை யறிந்து இவ்வத்தியாஸ ஹேதுவான அக்ஞானத்தைத் துலைத்து அஸங்கனும் சச்சிதானந்தனுமிருக்கிற பிரமமே யாமென்னு மனுபவத்தைப் பெறக்கூடும். ஆகையால் ஆரியமதமே சிலாக்கியம்.

(இன்னும் வரும்.)

கணேச ஆரியர்.

அநவத்யா.

"முனிவர! நான் பிரமாவின் மானஸ ராஜபுத்திரி; முக்கியமாய்ச் சகலபிராணிகளுடைய பாபத்தைப்போக்கி, அவர்களை சத்கதி யடையும்படி செய்யும்பொருட்டே இவ்வுலகெய்தினேன். நான் லோபா முத்திரை என்கிற பெயருடன் தங்கட்குப் பத்நியாயும், காவேரி என்கிற பெயருடன் நதியாகப்பிரவகித்து, என்னை மனதினால் ஸ்மரித்தாலுஞ் சரி, என்னுடைய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினாலுஞ் சரி, அவர்களுடைய பிரமஹத்தியாதி பஞ்சமாபாதகங்களையும் போக்கி, மோக்ஷ சாம்பிராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுக்கிறதென்கிற எண்ணங் கொண்டிருக்கிறேன். அவ்வெண்ணம் நிறைவேறுமாறு ஷாட்குண்ய பரிபூரணரான தாங்கள் எனக்கு அனுக்கிரஹித்து, இவ்வுலகின்கண் உள்ள எல்லா தீர்த்தங்களைக் காட்டிலும் நான் மேலாகவே அழியாத கீர்த்தியுடையவளாய் விளங்குமாறு வரமளிக்கும்படி வேண்டுகின்றேன்," என்று பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து குனிந்த தலை

யுடன் அஞ்சலிஹஸ்தையாய் நின்றாள். அகத்தியமுனிவர், அவளுடைய பணிந்த மொழிகளைக் கேட்டுக் களித்து, "அவ்வாறே யாகுக" வென்றாசிகூறி, அக்கன்னிகா ரத்னத்தை மணம்புரிந்துச், சிலகாலம் வரையில் லோபாமுத்திரையுடன் இனிது சுகித்திருந்தார். பிறகு கொஞ்சநாட்கழித்து அவ்வனிதையின் வேண்டுகோளின்படி காவேரி என்கிற அம்சத்தை ஓர் கடத்தில் ஆவாஹனம் பண்ணிவைத்தார், ஓர் நாள் சக்யபர்வதத்தின் தாழ்வாரையில், காவேரியை தீர்த்த ரூபமாய் ஆவாஹனம் பண்ணியிருக்கும் கடத்தை வைத்து முனிவர்தன் சிஷ்யர்களை அங்கு பத்திரமாயிருக்கும்படி திட்டஞ்செய்துவிட்டுத் தான் ஸ்நானத்துக்குச் சென்றனர். அப்பொழுது காவேரி இது தான் சமயமென பிரவகித்துச் சென்றனள். ஸ்நான சந்தியானுஷ்டான முடித்துக்கொண்டு முனிவர் கடம் வைத்தயிடத்தை வந்து பார்க்க, கடம கவிழ்ந்திருப்பதும், காவேரியைக் காணாதிருப்பதுங் கண்டு துன்புறுவதைக் காவேரி அறிந்து, பெண் வடிவங்கொண்டு அகத்தியமுனிவரை அணுகி, அவரைத்தேற்றி அவராக்ஞையின்படி திரும்ப நதியாய் பிரவாகமாகி கீழ்த்திசைநோக்கிச்சென்று சமுத்திரசங்கமமானாள் அந்தக்காவேரியே இந்நதிவுருவங் கொண்டிருக்கிறாள். இவ்வாற்றினிருகரைகளிலேயும் அநேக ஹரிஹர பிரமாலயங்களுள ; முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசஞ்செய்கிறார்கள். ஈசுவரன் சுவயம் பூலிங்காக்ருதியாய் இவ்வுலகில் ஆவிர்பவித்திருக்கிற ஸ்தலங்களுள், இத்தலமுமொன்று. கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி முதலிய சமஸ்தமான தீர்த்தங்களும் இம்மகா நதியில் நீராடி தம்தம் பாபங்களைப் போக்கிக் கொள்ளுகின்றன," என்று சொல்லி முடித்தார்.

நாதசர்மா இவ்வாறு காவேரியின் விருத்தாந்தத்தைச் சொல்லக்கேட்ட அநவத்யா தேவியானவள் பரமசந்தோஷமுற்று, காவேரியை மனதில் செம்மையாய்த் தியானித்து நமஸ்கரித்தாள். அந்த ஸ்தலத்தில் தினம் காலையிலெழுந்து இருவரும் காவேரியில் நீராடுவார்கள். குலாசார விதிப்படிக்குள்ள நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு மாயூரநாத சுவாமியைச் சேவிப்பார்கள் ; பிறகு ஈசுவர பூஜைதனைப்பு ரிவார்கள். நல்ல சத்கதாசிரவணம் பண்ணுவார்கள். அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், இவர்களைக் கண்டால் வணங்கி யுபசரிப்பார்கள் ; தம்மை யடைந்தோர்க் கருள்புரிவார்கள் ; வறியோர்க்கீயாமலிரார் ; எவரையும் முன் புகழ்ந்துரையார்கள் ; பின் முறுவல் செய்திகழார்கள் ; கடிந்து பேசார்கள் ; இன்சொல் மொழிந்தே மகிழ்விப்பார்கள் ; கொடையே எவர்க்கு மெப்பேறுங் கொடுக்குமாதலால், தம்மாலியன்ற நன்கொடை யளிப்பார்கள். தம்முயிரைப்போ லெவ்வுயிர்க்கு மெண்ணுவார்

கள் ; பிறர் துயரைத் தாம் தாங்கிக் காக்க விரைகுவார்கள் ; மாதந்தோறும் விசேஷமாய்த் துலா மாஸத்தில் சுக்ல பிரதமையில் அக்நி பூஜையும், த்விதியையில் பிரமபூஜையும், திருதியையில் ஈசுவர பூஜையும் ; சதுர்த்தியில் விநாயக பூஜையும், பஞ்சமியில் சேஷ பூஜையும், ஷஷ்டியில ஸ்கந்த பூஜையும், சப்தமியில் சூரிய பூஜையும், அஷ்டமியில் சிவ பூஜையும், நவமியில் துர்க்க பூஜையும், தசமியில் யமபூஜையும், ஏகாதசியில் சமஸ்த தேவதாபூஜைகளும், துவாதசியில் விஷ்ணு பூஜையும், திரயோதசியில் மன்மத பூஜையும், சதுர்த்தசியில் பரமசிவ பூஜையும், பௌர்ணமையில் சந்திர பூஜையும், செய்வார்கள் ;

சிற்சில சமயங்களில் ஆநந்தத்தாண்டவ மாடுவார்கள். கரதாளத்துடன் பகவந்நாமசங்கீர்த்தனம் பண்ணுவார்கள். ஹே, பரம கருணை நிதியே ! எங்குந்நிறைந்த கடவுளே! தேஜோமயாநந்தமே! எங்கள் மாயமநதை யடக்கியாளத் திறமையில்லாத ஏழைகளாயினேமே! என் செய வல்லேம் ! சிந்தை தெளியாது சுழலுகின்றதே அப்பனே ! தினமே செலச்செல எம் வாழ்நாட்கள் குறைகின்றனவே அய்யனே ! அதற்குப் பின்னிடைந்தவர்களல்லேம் நாதனே ! எங்களை ஏககாலத்தில் உமது திருவடி சேர்ப்பிவித்துக்கொண்டு எங்கள் கோரிக்கையை ஈடேற்றுவதுதான் எங்கள் விருப்பம் ஈசனே ! என்று முறையிடுவார்கள்.

இப்படியே இவ்விருவரும் சதா ஈசுவர பக்தி செய்து கடுந்தவம் புரிந்து வருகையில் அணிமாத்யஷ்ட சித்திகளும் பெற்று பரம கைவல்யத்தையுஞ் சாதனமாகக் கொண்டார்கள். இவர்கள் பிரபாவத்தை உணர்ந்த நைமிசாரணயம், பதரிகாசிரமவாசிகளாகிய மகரிஷிகளும், உலகத்திலுள்ள சர்வப்பிராணிகளும், இவரை வந்து கண்டு பணிந்து பின்பு மாயூர நாதரைச் சேவிப்பார்கள். இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருக்கையில் ஓர்நாள் பரமசிவன் கருணைபுரிந்து விமானமனுப்பி நாதசர்மா, அநவத்யாதேவி இருவரையும் ஏககால்த்தில் தன்னடி சேர்ப்பித்துக்கொண்டார். நாதசர்மா சிவதாஸனாகக் கைலாயத்தில் விளங்கினார். அத்வங்யாதேவியோ பார்வதிக்கு முக்கிய தோழியானாள்.

மாயூர க்ஷேத்திரத்திலும், ஈசுவர சன்னிதானத்திற்கு தக்ஷிண பாரிசத்தில் அநவத்யாதேவியால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட லிங்கம் இக்காலத்திலும் 'அநவத்யேசுரலிங்கம்' என்று விளங்குகிறது ; அந்த லிங்கத்திற்கு ஆக்நேயத்தில் நாதசர்மாவால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட லிங்கம், 'நாதசர்மேசுர லிங்கம்' என்று விளங்குகிறது. சகல ஜனங்களும் மாயூரம்போய் காவேரியில் ஸ்நானம்பண்ணி, மாயூரநாதனைச் சேவித்து, ஈசுவரசாயுஜ்யத்தை யடைந்திருக்கும், நாதசர்மா, அநவத்யாதேவி இவர்களைத் தரிசிப்பதாகவே பாவித்து, அவ்விருவரால் பிர

திஷ்டை பண்ணப்பட்டிருக்கிற லிங்கங்களைத்தரிசித்து வருகிறார்கள். அப்படிச் செய்து ஜனங்கள் இக்கலியிலும் முக்தியை அடைகிறார்கள். இதில் எவ்வளவும் சந்தேகமில்லை. மானிடப்பிறவி யெய்திய இவ்விரு சதிபதிகளும் அடைந்த பெறும்பேறுதானென்னே! இதுவல்லவா ஜன்மசார்த்தகம்!

யாமிதுகாறும் இவ்விதிகாசத்தைக் கூறப்புகுந்த கருத்தென்ன வெனில்:— உலகத்தில் மானிடராய்ப் பிறந்தவர், வீண்சண்டைக்குப் போதல், உபயோகமற்ற வழக்குகளை விலைக்குக் கொள்ளல், தீபகாரியத்திற்குச் செல்லல், பிறமாதரைக்கண்டு மயங்கல் பொய் சொல்லல், நல்லோர் பெரியோர் துறவினர் இவர்களைக்கண்டால் நிந்தித்தல், பெற்றோரைப் பேணாது அவமதித்து விட்டுவிடல், சாஸ்திரங்களை ஆராயாதிருத்தல், அவைகளை யாராய்ந்த சிலரும் அவைகளின் பயனறியாது மூடர்களைப்போ லிருத்தல், பிறர்க்கு அபகாரமே செய்தல், நன்றி மறத்தல், லோகோபகாரமான நன்முயற்சியைக் கெடுத்தல், செல்வச் செறுக்கினால் தாம் வாழ்தல் சதமென்றெண்ணிப் பிறன்கேடு விளைத்தல், பிறர்பொருளை வஞ்சித்துக்கவருதல், நட்பைப்பிரித்தல், அதற்கு வேண்டிப் புறங்கூறல், கள்ளுண்ணல், பொறாமைகொள்ளல் முதலிய தீயொழுக்கங்களை முற்றுங்களைந்து சன்மார்க்கத்தில் ஒழுகி நடந்து, சதா ஈசுவரபஜனை செய்து இன்பமுறவேதான். சுபம். சுபம்.

துறையூர் தேவஸ்தானம் தர்மகர்த்தா வீரமாச்சாம்பட்டி சுப்பய்யர் அவர்கள்.

இவர்சென்ற ஐப்பசிமாதம் 22வ சுக்கிரவாரத்தன்று பரலோகமடைந்தார். இவர் விசாரணையில் துறையூரில் நான்கு தேவஸ்தானங்களும், திருப்பைஞ்ஞீலியில் ஒன்றும் இருந்தன. அவைகளை இருபத்திரண்டு வருஷகாலம் விசாரணை செய்து வந்திருக்கிறார். முற்பாதியாகிய பதினொரு வருஷம் மேற்படி தேவஸ்தானங்களில் நித்தியப்படி பூஜையும், பஞ்சபருவம், மாசபூஜை, பிரமோச்சவமுதலிய விசேஷ பூஜைகளும் சிறப்பாய் நடத்தி வந்தது மன்றி, திருப்பணி வேலைகளும், திருக்குள ஜீரணோத்தாரண வேலைகளும், சிலதிருவாபரணங்களும் செய்திருக்கின்றனர். துறையூர் ஜமீந்தார் அவர்கள் ம-ா-ா-ஸ்ரீ செட்டிகுளம் குமாரவெங்கடாசல ரெட்டியார் துரையவர்கள் விசாரணையிலிருந்ததற்குப் பிறகு, இவர்க்கு முன்னிருந்த மானேஜர்களில நீடித்து இவ்வளவு விமரிசையாய் நடத்தினவர்கள் ஒருவருமில்லை யென்று ஒருவாறாய்ச் சொல்லலாம்; பிற்பாதியாகிய பதினொரு வருஷகாலமாய் தே

வஸ்தான விசாரணை சரியாய் நடந்து வரவில்லை; அதற்குக் காரணம்: இவர், இவர்க்குப் பந்துவாயுள்ளவர்களை தேவஸ்தான உத்தியோகத்தில் நியமித்ததனால், அவ்வுத்தியோகஸ்தர்கள் மானேஜர் தமமவர் என்னும் பலத்தினால் தேவஸ்தானத்தில் கைங்கரியம்பண்ணும் சிப்பந்திகட்கு ஏற்பட்ட வரும்படிகளைக் குறைத்துத், தங்கட்கு மிகுதியான சம்பள மேற்படுத்திக்கொண்டதி னிமித்தம், கோவில் சிப்பந்திகட்கும் மானேஜருக்குங் கலகமுண்டாய், மானேஜருக்கும் கமிட்டியார்களில் சிலருக்கும் விரோதமு முண்டானதுதான். இதனால் சிலசிவில் வியவகாரங்கள் கிளைத்துக் கொண்டே வந்து தேவஸ்தானபணத்தை மிகுதியாய்ச் செலவிட நேரிட்டது. இவர்க்கிதனா லபக்யாதி யுண்டானாலும், இதற்கு முன் இவர் நடத்திவந்த தருமங்களினாலுண்டாகிய யசசுக்கு முன் அதுநிற்கத்தகுந்ததல்ல வென்பதை, அவர்க்கு விரோதிகளாயிருந்தவர்களும் இவர் இறந்ததற்கு மகிழாமல் வியசனிப்பதால் அறியலாம்.

இவர் முசிரிதாலூகாவிலுள்ள பிராமணருள் சிறந்தபணக்காரர்; புத்திர பௌத்திராதி குடும்ப விருத்தியுள்ளவர்; சம்ஸ்கிருத விற்பத்தியுமுள்ளவர்; ஆனால் இவர் சொந்தத்தில் நிரந்தரமான ஒரு தருமத்தை தேவாலயங்களிலாவது, வேறிடங்களிலாவது செய்யாமலிருந்ததைப்பற்றிப் பிறர் உலோபகுண முடையவரென்று சொல்வதற்குச் சிறிது இடந்தருகின்றது. ஆயினும் நைஷ்டிகராயிருந்தவர்; மொத்தத்தில் இவர், தனதான்னியம், புத்திர பௌத்திராபி விர்த்தி முதலிய சம்பத்துக்களை யுடைத்தாயிருந்தமையாலும், இவருக்கு ஆயுள் காறும் துக்க சம்பவமான காரியங்கள் இவர் குடும்பத்தில் ஒன்றும் நடவாமலிருந்தமையாலும், துறையூர்சமஸ்தானத்தில் சிலகாலம் மந்திரியாகயிருந்தமையாலும், தேவாலயதர்மபரிபாலனம கிடைத்தமையாலும்,பூர்வபுண்ணிய முடையாரென்பதற்குச் சந்தேகமில்லை.

புராணங்களில் சிவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த திருவிளக்கிலுள்ள நெய்யை ஒரு எலி தின்னும்போது திரியானது தூண்டப்பட்டு நன்றாய எரிந்தமையால், கடவுள் நெய்யைத் தின்ற தோஷத்தைக் கவனியாது திருவிளக்கைத்தூண்டிய அபுத்திபூர்வமான புண்ணியத்திற்காக அவ்வெலி மாபலி சக்கிரவர்த்தியாய்ப் பிறந்து அரசுபுரியச் செய்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் முசுகுந்த சக்கிரவர்த்தியும் அரசாண்டதற்கு முன்பிறப்பில் 'முசு' வென்னுங் குரங்கு பில்வமரத்தில் தாவியபொழுது, கீழிருந்த சிவலிங்கத்தின்மேல் அவ்விலை சிந்தினமைதான் காரணமென்று சொல்லப்பட் டிருக்கின்றது. ஆதலால், இவர் தேவாலய பரிபாலனஞ்செய்து வந்ததில் ஒரு வேளை அபு

த்திபூர்வமான தோஷங்களிருப்பினும், அவைகள் மேற்சொல்லிய உதாரணத்தினால் இவர் புத்திபூர்வமாய்ச் செய்த புண்ணியங்கட்கு முன்னிற்கமாட்டா. பக்தர்கள் புத்திபூர்வமாய்க் குற்றஞ்செய்யினும், கடவுள் அதனை அங்கீகரியார். என்பதை 'திருக்கருவைப்பதிற்று'ப்பத்தந்தாதியில் அதிவீரராமபாண்டியர், "அடியாரிழைத்தபிழைகோடி நெஞ்சிலறியாத வாதி முதல்வன்," என்று வெளியிட்டிருக்கின்றார். ஆதலால் இவர் புண்ணிய லோகமடைந்ததை இவருக்கு நேர்ந்த அனாயாச மரணமு மறிவிக்கின்றது.

இதனால் தேவஸ்தானம் மானேஜர்களாயுள்ளவர்கள் கவனிக்கத் தக்கதொன்றுளது. அதாவது: தமக்கு அபிமானமுள்ளவர்களை தேவஸ்தான உத்தியோகத்தில் நியமிப்பது குற்றமென்றும், அதிலும் உறவினரா யுள்ளவர்களை நியமிப்பது பெருங்குற்றமென்றும், உணர்வதேயாம். ஏனெனில், அபிமானமுள்ளவர்களும், உறவினரும் எஜமானனால் நாம் அன்பு செய்யப்பட்டிருக்கிறோம், என்னுங் கொர்வத்தால், தமக்குக் கீழிட்ட சிப்பந்திகளை தருமா தருமம்பாராமல் வருத்தி இலஞ்சம்வாங்க ஒருப்படுவதற்கும், சிப்பந்திகளோ அன்னோர் செய்யுங் கொடுமைகளை எஜமானனிடம் தெரிவிப்பதற்கு எஜமானனுக்குப் பிரியமுள்ளவர்கள் குற்றத்தைச் சொன்னால் தங்கள்மேல் கோபித்து வேலையைவிட்டு நீக்கிவிடுவானென்று அஞ்சித் தங்கள் நியாயத்தை இழப்பதற்குக்காரணமாகின்றது. மானேஜர், உறவினர், அயலார்களென்னும் பேதமின்றி பொது நோக்கமுடையவர்களா யிருப்பினும், உறவினருக்குத் தம்மீது எஜமானனுக்கு அபிமானமிருக்கு மென்னும் நம்பிக்கையினால் தீங்கு செய்ய நேரிடும். ஆதலால் இவைகளை நன்காராய்ந்து நடத்துதல் வேண்டும். தவறினால் இம்மையில் அபகீர்த்தியும், மறுமையில் நிரம்பத் துன்பமெய்துவார்களென்பது சித்தம். து. ப. வி.

இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகாசபை.

மேற்கண்ட சபையார் சென்ற டிசம்பர்மாதம் 23, 24, 26-ம் தேதிகளில், பம்பாய்க்குச் சுமார் 350 மைலுக்கு வடக்கே கூர்ச்சர தேசத்திலுள்ள புராதன நகரமான ஆமேதபாத்தில் கூடினார்கள், 25-ம்தேதியில் கிறிஸ்ட்மஸ்'பண்டிகையானதால் அன்று சபைகூடவில்லை. இந்நகருக்கு ஜி. ஐ. பி. (G. I. P.) ரெயில்வே மார்க்கமாய் பம்பாய் சென்று நேர் வடக்காய் பம்பாய், பரோடா, மத்திய இந்தியா வழியே ரெயிலில் செல்லவேணும். இதுவோர் கோட்டை. அங்கிலேயருக்கு முக்கியமான ஓர் இராணுவஸ்தலமுமாம். 1572-ம் ஆண்டில் அக்பர் என்பார் பில் என்னும்

ஜாதியாரிடமிருந்து அவர்களை ஜயித்துக் கைப்பற்றிக் கொண்ட இடம். இது 16, 17-வது நூற்றாண்டுகளில் அதிசிறப்புற்று, 360-பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் மதில்கள் எழுப்பப்பட்டன. 18-வது நூற்றாண்டில் மொகலாய தர்பார் சீர்குலைய, இந்நகரின் உரிமையைப்பற்றி, மகம்மதியரும் மகாராஷ்டிரரும் சச்சரவு செய்துகொண்டார்கள். 1738-ம் வருஷத்தில் தாமாஜீகைக்வாரும் மோமீன்கானும் ஒன்று சேர்ந்து ஆமெதபாத்தைக்கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு பீஷ்வாவின் அதிகாரத்துக்கு வந்தது. 1780-ஹூத்தில் ஆங்கிலேயருக்கும், மகாராஷ்டிரருக்கும் நடந்தயுத்தத்தில், ஆங்கிலேயர் இதைபிடித்துக்கொண்டாலும், ஓர் சமாதான உடன்படிக்கையில் மகாராஷ்டிரர் வசமே மறுபடி விட்டுவிட்டார்கள். பீஷ்வாவின் அதிகாரம் குலைந்த 1818ம்ஹூ முதல் ஆங்கிலேயர் வசத்திலேயே இருந்து வருகிறது. ஆமேதபாத் நல்ல ஸ்திதியிலிருந்த காலத்தில் அதில் சுமார் 10-லக்ஷம் ஜனம் வசித்தனராம். ஆங்கிலேயர் கைவசப்படுத்திக்கொண்டகாலத்தில் ஒருலக்ஷத்திற்கும் குறைந்திருந்ததாம். இப்போது ஜனத்தொகை ஒன்றரை லக்ஷமாம். தங்கம், வெள்ளி, பருத்தி ஆகிய இம்மூன்று வித நூல்களைக் கொண்டு நெசவு நெய்யும்படியான சிறந்த பட்டணமாம். இதில் பற் பல தொழில் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதில் மனோரஞ்சிதமான மசூதிகளும், கோரிகளும், இன்னும் சிறந்த கட்டிடங்களும் இருக்கின்றன. இது டில்லிக்குச் சமானமாகாவிடினும், இந்தியாவிலுள்ள சிறந்த நகரங்களில் ஒன்றுதான்.

இது 18-வது கூட்டம், அதாவது இந்த வருஷத்துடன் காங்கிரஸ்பாலனுக்கு 18-வது வருஷம் நிறைவு பெற்றது. இப்பாலனுக்குப் பால்யங்கடந்து யௌவனப்பருவம் வந்திருக்கிறது. தக்க பருவம் வந்துவிட்டமையால் இனி நம்முடைய க்ஷேமத்தை நாடி இராஜாங்கத்தாரிடம் போராடி நன்மையையே செய்யத் துணிவான் என்பதற்கறிகுறியாக, இந்த காங்கிரஸ் சபையானது வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. சென்ற வருஷத்தில் இச்சபையானது புனாவில் நிகழ்ந்தது. அப்பொழுது அக்கிராஸனாதிபத்தியத்தை வகித்த மிஸ்டர் சுரேந்தரநாத்பானர்ஜி என்பவரே இப்பொழுதும் அக்கிராஸனாதிபத்யத்தை வகித்தனர். இச்சபையில் அக்கிராஸனம் வகிப்பது சுலபமான காரியமல்ல. கூரிய அறிவும, இராஜாங்க விஷயங்களில் தெளிந்த வாராய்ச்சியும், உலகிலுள்ளோர் கொண்டாடும்படியான, நாட்டு அனுபவத் தேர்ச்சியும் உள்ளவரன்றி, இச்சபையில் அக்கிராஸனத்தை வகிக்க யோக்கியமானவரல்லர். சாதாரணமாய்ச் சில சபைகளில் அக்கிராஸனத்தை வகித்துச், சில விஷயங்களைப் பேசிவிட்டு எழுந்து போவது போல் செய்யாமல், இச்சபையில் அக்கிராஸனாதிபத்

யத்தை வகிக்கும் கனவான்கள், பொதுவாய் இராஜாங்கத்தாருக்கும் பிரஜைகட்குமுள்ள சம்பந்தா சம்பந்தத்தையும், உலகத்தோருக்கு இராஜாங்கத்தாரிடமுள்ள உரிமையையும், குறைவு பாடுகளையும், இவை போன்ற இன்னும் உலோகோபகாரமான அநேக விஷயங்களையும் தொகுத்து உபந்நியசிக்க வேண்டுமாம். ஆகலின் மிஸ்டர் சுரேந்தர நாத்பானர்ஜியைப்போன்ற தீர்க்க தரிசிகளே இப்பதவியை வகித்தல் வேண்டும்.

சுரேந்தரநாத்பானர்ஜி என்பவரைச் சபைரஞ்சிக்கப்பேசும் ஆண் சிங்கமென்றே சொல்லுகிறார்கள். அவருடைய தேனொழுகும்படியான வார்த்தைகள் சொல்லும் மாதிரியானது, சொல்நயம், பொருட்பொலிவுடன் கூடி தோரணையாயும், கம்பீரமாயும், சாதுர்யமாயும், எவருடைய மனத்தையும் கவருப்படிக்குக் கேட்கக்கேட்க இன்பத்தையே கொடுக்கும்படிக் கிருந்தது.

தன்னை அபிமானித்து அன்பு பாராட்டி இச்சபையில் அக்கிராஸனத்தை வகிக்குமாறு கேட்டுக்கொண்டவர்கட்கு அவர் முதல் முதலில் வந்தனந் தந்தனர்.

ஏராளமான பொருட்செலவு செய்து டில்லிமாநகரில் நடக்கப்போகும் தர்ப்பாரானது, அநேக ஆடம்பரங்களுடன் நின்றுவிடாமல் இந்தியர்கள் ஒருக்காலும் மறக்காதபடி அவர்கட்கு இராஜப் பிரதிநிதியவர்களாகிய லார்டு கர்ஸன் பிரபு அவர்கள் தருந்த சகாய மெய்துவார்கள்என்று எடுத்துரைத்தும், சர்வ கலாசாலை விசாரணை சபை சிபார்சுகளைப் பலவாய்க் கண்டித்தும், இந்தியாவில் வறுமை அதிகரித்துவருவதை இராஜாங்கத்தார் விசாரித்தறிய முயலவேண்டுமென்றும், லார்டு ரிப்பன்; லார்ட் டப்ரின் பிரபுக்கள் இராஜப்பிரதிநிதிகளா யிருந்த காலத்தில் இந்தியாவின் க்ஷாமவிஷயமாக அந்தரங்கமாய் விசாரித்தறிந்த விஷயங்களையெல்லாம் பகிரங்கப்படுத்த வேண்டுமென்றும், அப்படி அவைகளைப் பகிரங்கப்படுத்தாமலிருப்பது சரியல்லவென்றும், நிலவரியால் நேர்ந்த கஷ்டங்கள், உப்புவரியைக் குறைக்கவேண்டிய விஷயங்கள், வெகுநாளாய்ப் போராடிவரும் சுதேசிகட்கு இராஜாங்கத்தில் பெருத்த உத்தியோகங்களைக் கொடுத்தல், நெட்டாலில்இந்துக்கள் படும் பலவிதத்துன்பங்களைப் பற்றியவைகளையும் மிகவும் உருக்கமாய்ப் பேசிமுடித்தார் அவர்.

பிறகு மற்றைய நாட்களில் பற்பல தீர்மானங்கள் செய்யப்பட்டன; அவைகளுள் (1.) இந்திய சக்கிரவர்த்தியென்று பட்டாபிஷேகம் பெற்றுக்கொள்ளுகிற நமது கருணை பெருங் கடலாகிய 7.வது எட்வேர்டு சக்கிரவர்த்தியானவர் நீடூழி வாழ்ந்து சமாதானத்தோடு இராஜ்யமாள வேண்டுமென்றும், (2) காங்கிரஸின் தாங்கிகளாகிய காலஞ்செ

ன்ற பம்பாய் கனம் மிஸ்டர்ஸயானியைக் குறித்தும், சென்னை கனம் மிஸ்டர் இரங்கையநாயுடுவைக் குறித்தும் அதிக துக்கப்படுவதாயும், (3) மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யருடைய பிரேரேபணைப்படி ப்ராசீன கைத்தொழில்கள் நாசமடைந்து போகவும், வருஷா வருஷம் இங்கிலாண்டுக்குப் பெருந்துகை கொண்டுபோகவும் நேர்ந்ததினால், சுமக்க கூடாத வரியை ஜனங்கள் சுமந்து வறுமை அதிகரித்துக்கொண்டு வருகிறதென்றும், அவ்வறுமையை யகற்றுமாறு இராஜாங்கத்தார் நம் உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கலாசாலைகளில் ஸ்தாபித்து விருத்திக்குக் கொண்டு வருவதுமன்றி, நிலவரியை அடிக்கடி உயர்த்தாமல் ஓர் திட்டத்திற்குக் கொண்டுவந்துநம்நாட்டுப்பொருள்கள் வேறுநாட்டுக்குச் செல்லாது ஏற்பாடுகள்செய்யவேண்டுமென்றும், (4) பெல்காம் மிஸ்டர் நட்டு பிரேரேபித்தபடி லண்டன் பஞ்சஐக்கிய சங்கத்தார் (Famine union) செய்ததீர்மானத்தைக் காங்கிரஸ்சபையார் அங்கீகரிக்கிறார்களென்றும், அவர்கள் கோரிக்கையை இராஜாங்கத்தார் செய்தால் நாட்டுக்கு வெகுபிரயோசனமென்றும், சிலகிராமங்களைத் தெரிந்தெடுத்து அவைகளின் குடித்தனக்காரர் வளமையை அறியவேண்டுமென்றமேற்கூறிய சங்கத்தாரின் தீர்மானத்தை ஆமோதித்து, பம்பாய் மிஸ்டர் பாய்ஷங்கர் குஜராத்திபாஷையில் தைரியமாய்ப் பேசித் தீர்மானித்ததாகவும், (5) தென்னாபிரிக்காவில் இந்தியருக்குள்ள கஷ்டங்களைப் பற்றியும், (6) 1893ஆம் வருஷத்திய நாணயசட்டம் வியவசாயிகட்குக் கெடுதி என்று கண்டித்தும், (7) சோல்ஜர்களின் சம்பளங்களை உயர்த்தி இந்தியாவின்வரியை அதிகப்படுத்த உத்தேசித்திருப்பதைக் கூடாதென்று ஆக்ஷேபித்தும் பற்பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

இந்த வருஷம் ஆமெதபாத்தில் சுமார் 500-550 பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சபைகூடினார்கள். இந்தியாவின் நாலாபக்கங்களிலிருந்தும் ஜனங்கள் வந்திருந்தார்கள். இவ்விநோதத்தைக் காணசுமார் 5000-ஜனக் கூட்ட மிருக்கலாம். சபையில் நம்மவர்கள் பேசிய ஊக்கத்தையும், உற்சாகத்தையுங் காணுங்கால், நம்மவர்கட்கு சுதேசாபிமானம் உண்டாயிருப்பதாகக் காணப்படுகிறது; இச்சபையானது சிலருடைய நன்மையைக் கருதியன்று. இந்துதேச முழுவதும், வறுமையின்றி சுகமடையவாகவின், நம்மவர்கள் ஒற்றுமையுடன் இயன்ற உதவி புரிந்து சபையைப்பலப்படுத்த முயல்வார்களாக. அடுத்த வருஷம் சென்னையில் இதைக்காட்டிலும் சிறப்பாய் சபைகூடுமென்று எதிர்பார்க்கிறோம். இதற்கு அந்தரங்கமாய்ப் பாடுபடும் நம் இராஜதானியைச் சேர்ந்தவர் ஒருவரை அடுத்த வருஷத்தில் அக்கிராஸனாதிபத்யத்தை வகிக்கச்செய்வார்களாக. சுதேசாபிமானிகளைக் கடவுள் காப்பாற்றுவாராக. சுபம்.

சுபாஷிணி.

(தொடர்)

பிரியதரிசனன்.—நங்காய், சுபாஷணி ! கற்புடைய ஸதிரீகள் உண்ணுதலு முறங்குதலும் எப்படிச் செய்வார்கள் ?

சுபாஷணி—அண்ணு ! தன்னன்பினுக்குரிய காதலர்களுக்கு முன்னதாக அன்ன பனுதிகளை இலையினும், மதுரமானச் சொற்களைக் காதுகளிலும் பரிமாறி,

அடிக்கடியுபசரித்து, அவர்கள்வேண்டுமளவுந் தின்று மிருந்த சேஷத்தை அமுதத்தைக் கண்ட தேவர்களைப்போல் ஆவலோடு புசிப்பார்கள். பிற்பாடு சயனத்தை நன்ருய்த்தட்டி விரித்துவைத்துக்கொண்டிருந்து தங்கணவர்கள்வந்து சயனித்துக் கொண்டதின்பிறகு, காலவருடல், ஆலவட்டமசைத்தன் முதலிய பணிவிடைகளில் யாதாயினு மவசியமானதொன்றைச் செய்துக்கொண்டிருந்து அவர்களயர்ந்து நித்திரைசெய்தபின், தாங்ளுஞ் சிறிது நேரந்துயின்று அந்நாயகரெழுவதற்கு முன்னெழுந்து, மீட்டும் அப் பணிவிடைகளிலொன்றைச் செய்துகொண்டிருந்து அவர்களெழுந்ததின்பின் அவர்களைவணங்கித் தொழுதுகொண்டுவேறு தொழிலிற் பிரவேசிப்பார்கள். திருவள்ளுவநாயனுர், மனைவியார் இறந்ததின்பின், அவர்,

"அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின்றுங்கி முன்னேழு உம் பேதையே போதியோ
என்றூங்கு மென்கணிரா."

என்றுசொல்லி யழுதிருக்கின்ருர். அன்றியும்,

"தெய்வந்தொழா அள்கொழுநற் ரெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

எனவும் கூறி யிருக்கின்ருர்.

பிரியதரிசனன்:—"கற்பகவல்லி போன்ற கற்புடைய பெண்கள் ஆபரணங்களையும், புஷ்பங்களையு மலங்கரித்துக்கொண்டு களிப்புற்றிருக்குங்கலாம் யாது?"

சுபாஷணி:—"அண்ணு சொல்லுகிறேன் கேள்! தங்களின்னுயிர்க் காதலர் இல்லத்தைவிட்டெங்கும் வெளியில் போகாதகாலத்தில் நீராடிப், பட்டுமுதலிய உயர்ந்தவஸ்திரங்களை யுடுத்து, வாஸனைப்பொடிகளையும் ஆபரணங்களையுந் தரித்துக்கொண்டு, கூந்தலைப் பின்னல் முடி கொண்டை முதலியவற்ருல் அலங்கரித்துப் பூவைச்சூடி, அவர்களுக்குக் காதல்வெள்ளம் பெருகுமாறு எதிரில் அங்குமிங்கு முலாவுவார்கள். அங்ஙனங் காமுறச் செய்வதாற்ருன்,

"தாம்வீழ்வார் மென்ரேட் குயிலினினிதுகொல்
தாமரைக்கண்ணுனுலகு;"

"கண்டுகேட் டுண் டுயிர்த்துற்றறியு மைம்புலனு
மொண்டொடிக் கண்ணேயுள."

என அவரியல்பை நாயகர்கள் கூறுவதாக நாயனூர்க்கூறி யிருக்கின்றார். அந் நாயகர்கள் இல்லத்தைவிட்டு வெளியில் போயிருக்குங்கால், அத்தகைய அலங் காரங்கள் ஒன்றையும் விரும்பாமல், ஆபரணதிகளை எடுத்தெரிந்துவிட்டு மாச டைந்த மேனியையுடையவர்களாய், நம்காதலர் நம்கண்முன் தோன்றி நமது கண்களுக்கும் இல்லத்துக்கும் எப்பொழுது மங்களத்தை யுண்டுபண்ணுவாரோ என்றேக்கங்கொண்டு, அவர்கள் வரும்வழியை எதிர்பார்த்துக்கொண் டிருப்பார் கள்."

பிரியதரிசனன்:—"சுபாஷணி! சிலகற்புடைய மாதரசிகள், தம்மன்பிற்குரிய கொழுநர், காரணம்பற்றியாயினும் காரணமின்றியாயினும் கோபங்கொண்டு இழிந்தசொற்களால் வைவாராயின், அன்னோர் மனக்குறிப்பையுணர்ந்து அக்குறையை நிரப்புதற்கு விரைந்து செல்வதேயொழிய, தாமும் எதிர் மொழிகொடாமல் அமைந்திருப்பதே யாவராலு மெச்சப்படுகின்ற நற் குணமாம்."

சுபாஷணி:—"அம்மட்டோ? அக்காதலர் கோபத்தினுல் தண்டித்தாலும், நற்குண மமைந்த மங்கையர்கள், தம்கண்ணீரால் கணவருக்குப் பாதபிர க்ஷாளனஞ்செய்து, அக்குற்றத்தை இனிச்செய்கின்றிலேன், என்னுமென் மொழிகளாகிய மலர்களைச்சிந்தி, தங்கணவரது மனதை உலையிடுமெழுகு போல் உருகப்பண்ணி, முன்னிலும் பதின்மடங் கன்புசெய்வார்கள்."

பிரியதரிசனன்:—"என்னன்புக்குரிய சகோதரியே! உத்தமஸ்திரீகள் எப்பொ ழுதும் அயல்வீட்டுக்குப் போகுதலிலர்; ஏன் எனின், தம்கால்கள் செல லக்கருதியபொழுது மனமொற்றுமைப்படாமையானும் மனம் செல்லத் துடங்குகையில் கால்கள் விரோதித்துக் கொள்ளுதலானும் இவ்வாறு ஒன் றையொன்று சுவாதீனஞ் செய்குதலின்றி பகைமைகொண்டிருத்தலின்—."

சுபாஷணி:—அண்ணு! அதுமாத்திரமன்று; அப்பெண்ணரசிகள் அயல்வீடு செல்லுமாதர்களைக் காண்பதற்கும் கண்கூசுவார்கள்; அவர்களோடு பேசுதற்கும் விரும்பார்கள்; அன்றியும், இக்காரியஞ் செய்தனையோ வென வினவப்புகுமுன் அக்காரியத்தினை முன்னமேயே செய்துள்ளேன் என்று பாலோடு தேன்கலந்தென்ன விடைதருவார்கள்."

பிரியதரிசனன்:—"கற்புடையமடவார் கணவனுடைய வார்த்தைகளென்னும் கரைகளுக்குள்ளடங்கி ஒழுகுகின்ற கட்டுக்குளம்போ லிருப்பர், அக்கா தலர் சொற்களைக்கடந்து செல்லாமையே தருமமும் தபசும் தேவதார் சனையுமாம்."

சுபாஷணி:—அண்ணு! திருவிழாச் சேவித்தலும் நோன்புநோற்றலும், புண்ணி யதீர்த்தத்தில் நீராடுதலும், தேவர் கோயிலிற்சென்று தொழுதலும் தன்னு யகரோடன்றி தாமாகப்போகுதலிலர். அல்லாமலும், அயல்வீட்டிற்கும் கோயில்கட்கும் நாயகரின்றிப் போக நேரிடின், முதுமைப்பருவ முடை யாரோடு போதல்செய்குவார். தாங்களணிந்த ஆபரணதிகளை மூத்தாள் அல்லது இளையாள் என்னும் மாற்றவட்குக் கொடுப்பினும் மனவருத்த முறார்."

பிரியதரிசனன்:—"இன்னுமப்பெண்களுக்கு இயல்பாகவே அமைந்திருக்கின்ற குணங்கள்யாவை ?"

சுபாஷணி:—"ஆயுள்குறையுமென்னு மெண்ணத்தால் கொழுநனது பெயரைக் கூறாதிருத்தலும், நாயகனிருந்தபின் பன்றித் தாங்கள் முன்பு உட்காரா திருத்தலும், அவனுண்டசேஷத்தை அமிருதமாகக் கருதிப்புசித்தலும், அவ்வன்பன் விரும்பியவேலைகளை அவன்சொல்லுமுன் குறிப்பினாற் செய்தலும், புருஷன்மீது குற்றங்கூறும் பெண்களோடு சேராதிருத்தலும், வீட்டிற்குவேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொள்ளலும், வீண்செலவு செய்யாமையும், நாயகனுக்கு ஆயுள்விர்த்தியின் பொருட்டு மஞ்சள்குங்குமமணிதலும், நாயகனுடைய வார்த்தைகளைத் தட்டாமலிருப்பதே தருமம் தபசு பூசைகளாக நினைத்தலும், அன்றியும் அவன்குரூபியாயும், நீங்கா நோயினனாயும் கிழப்பருவமுடையவனாயு மிருப்பினுமிகழ்ந்து கூறாமையும் நாயகனிறந்தால் தாமுடனிறத்தலும், துன்பமுற்றால் தாமுந்துன்புறுதலும், இன்பமுற்றபொழுது இன்பமுற்றிருத்தலும், அவன்பாதங்கழுவிய தண்ணீரைத் கங்காதீர்த்தமாகக் கோடலும், திருமூர்த்திகளினு மெய்க்கடவுளாக அவனையெண்ணி வழிபடுதலும், ரஜஸ்வலையான மூன்றுநாளும் அவனெதிரில் தங்கள்முகங் காட்டாதிருத்தலும், ஸ்நானம்பண்ணின உடன் அவன்முகத்தைப் பார்த்தலும், அவன் ஊரிலில்லாவிடில் அவனை மனதிலெண்ணிக்கொண்டு சூரியதரிசனம் பண்ணுதலும், மாமி மாமனாருக்கு எதிரில்சிரித்துப் பேசாமையும், நாயகனழைக்கும்பொழுது அமிருதம்புசித்துக் கொண்டிருந்தாலும் விருப்பத்தோடு மதை எறிந்துவிட்டு சீக்கிரம் வருதலும், தந்தைதாய் புத்திரர்களைப் பார்க்கிலும் நாயனிடத்தில் ஆசையோடு சந்தோஷித்திருத்தலும், உரலுலக்கைகளிலும் அம்மியிலும் முறத்திலும் வாசற்படியிலும் உட்கார்ந்தால் இலக்ஷ்மி நீங்கிவிடுவாள் என்னுங் கருத்தால் அவைகளில் மறந்துமுட்காராமையும், விருந்தினர் சந்நியாசிகள் யாசகர் வேலைக்காரர்கள் பசுக்கள் தெய்வம் பிதுர்க்களை நாயகனுடன் உபசரித்தலுஞ் செய்வார்கள்.

பிரியதரிசனன்:—"என்னருமைத்தங்கையே ! அதோ நமது தந்தைவருகின்றார். இன்றைக்கிதனை இவ்வளவில் நிறுத்தி ஏனையவிஷயங்களை நாளைக்குப் பேசுவாம்," என்றான.

(இன்னும்வரும்)

டி. பி. விசுவநாதபிள்ளை,

Proceedings of the Teachers' Association Turaiyur, held at a Meeting on the 15*th* November 1902, *at the Zemindar's Lower Secondary School.*

PRESENT :

President.

M. R. Ry. V. Kothandaramanujachariar Avergal.
,, K. Doraisamy Aiyangar, *Secretary.*

Members.

1. Mr. R. Venkata Subbier, Head Master, Z.U.P.S.
2. ,, E. Venkatachellam Pillai, Assistant Master, Z.U.P.S.
3. ,, M. Ramasamy Naidu, R. S., Ranganathapuram.
4. ,, Namasivaya Vathiar, Perumalpoliem.
5. ,, Vadivelu Vathiar, Nagalapuram.
6. ,, Chithambara Vathiar, Oddampatti.

I. The President has explained to the members present, certain articles in the Grant-in-aid Code, relating to the Results Grants, and the courses of instruction of the first 3 Standards of the Madras Educational Rules.

II. The members one and all, were requested through post cards to attend this day's meeting, whereas they failed to do so.

III. The Supervisor of Primary Schools, Musiri Taluk, is requested to address the Sub-Assistant Inspector of Schools, that the absentee Teachers be warned that they will be fined if they fail to attend the meeting. The absence of a good number of Teachers, more or less to discourage the better working of the institution.

IV. The ResultSchool Teachers of Murugur, Sikkithambur, Palayam, and Sirunatham, may be excused for their absence, as their schools are to be examined to-day.

V. Unless the Supervisor is pleased to take severe measures towards the absentees, it is to be regretted that a good number of attendance of the members cannot be secured.

TEACHERS' ASSOCIATION, TURAIYUR, 15*th November* 1902. } (Sd.) K. DORAISAMI AIYANGAR, *Secretary.*

(Sd.) V. KOTHANDARAMANUJA CHARIAR, *President.*

(True copy)

(Sd.) K. DORAISAMY AIYANGAR, *Secretary.*

15—11—1902.

GRANT-IN-AID CODE.

உதவிக்ராண்டு சட்டம்.

1902—1903.

க்ராண்டின் திட்டம்.

நெம்பர்.	பாடங்களின் விவரம்.	ஸ்டாண்டார்டு.															
		இன்பெண்டு		I		II		III		IV		V		VI		VII	
1	2	3		4		5		6		7		8		9		10	
1	கட்டாயபாடங்கள் ...	...	4	11	8	2	8	3	8	5	...	6	8	8	...	10	...
2	இரண்டாம் பாஷை ...	...	4	...	8	1	...	1	8	2	...	2	8	3	...	4	...
3	ட்ராயிங்கு ...	...	...	...	6	...	9	...	12	1	8	3	...	4	8	6	...
4	பூகோளம் ...	...	...	...	...	...	...	...	8	1	...	1	8	2	..	2	8
5	சுகவழி ...	...	...	...	.	...	...	...	...	1	...	1	8	2	...	3	...
6	இந்துதேச சரித்திரம். ...	...	...	...	...	...	...	...	...	1	...	1	8	2	...	2	8
7	தேகாப்பியாஸம் அல்லது கஸாத்து Drill....	...	2	..	2	...	2	...	4	...	6	...	8	...	8	...	... 12

1. ஒவ்வொரு மாணுக்கனும் ஒவ்வொருபாடத்திலும் தேறவேண்டுமானாலும், க்ராண்டு பெறவேண்டுமானாலும் மூன்றிலொருபங்கு மார்க்கு (Mark) பெறல் வேண்டும்.

2. ஒவ்வொருபாடத்திலும், ஆஜர்செய்யப்பட்ட மாணுக்கர்களில் 100-க்கு 75 பேர் தனித்தனியே கட்டாயபாடங்களிலும் (Compulsory Subjects), இஷ்டமான பாடங்களிலும் (Optional Subjects) தேர்ச்சியடைந்தால் ஒவ்வொருபாடத்திலும் தனித்தனியாய்க் கூடுதலாகுங் க்ராண்டுத்தொகையில் 100-க்கு 10 வீதம் சேர்த்து க்ராண்டு கொடுக்கப்படும்.

INVALUABLE HINTS FOR DOCUMENT WRITERS.

தஸ்தாவேஜு எழுதுகிறவர்கட்கு வேண்டிய குறிப்புகள்.

II. விக்கிரய பத்திரம்.

22. தஸ்தாவேஜு சரியான ஸ்டாம்பில்எழுதப்பட்டிருக்கிறதா, இல்லையாவென்று ரிஜிஸ்தர் செய்வதற்கு முந்தியே ரிஜிஸ்திரேஷன் உத்தியோகஸ்தரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். (ரிஜிஸ்ட்ரேஷன் ரூல் 4.)

23. தஸ்தாவேஜுகளை ரிஜிஸ்தர் செய்யத்தக்கவையல்லை என்பதாக அடியில் கண்ட காரணங்களினால் நிராகரிக்கப்படும்.

(a) டிஸ்டிரிக்ட்டில் வழங்காமலும், ரிஜிஸ்த்ரேஷனுபீசருக்குத் தெரியாமலும் இருக்கிற பாஷையில் தஸ்தாவேசு எழுதப்பட்டு, அதற்குச்

சரியான தர்ஜமா நகல் தயார்செய்து தாக்கல் செய்யாதிருத்தல் (ரி. ஆக்ட். செக். 19.)

(b) தஸ்தாவேஜுகளில் வரிப்பிளப்பு, இடம் விட்டிருத்தல், அடித்தல், திருத்தல், முதலியவைகட்கு இனிஷியல் செய்யப்படாதிருத்தல்; (ரி. ஆக்ட். செக். 20)

(c) தஸ்தாவேசில் கண்ட சொத்தை இன்னதென்று விவரமாய் தெரிந்து கொள்ளக்கூடாதிருத்தல்; (ரி. ஆக்ட். செக். 21. (a) (b), 22.

(d) பிளானிலிருக்கும் தஸ்தாவேஜைக் குறித்து அந்தப் பிளானுக்கொரு சரியான நகல் தாக்கல் செய்யாதிருத்தல்; (ரி. ஆக். செக். 21. c.)

(e) தஸ்தாவேஜை வாயிதாவில் தாக்கல் செய்யப்படாதிருத்தல்; (ரி. ஆக். செக். 23. 24. 25. 72. 75 & 77.)

(f) தஸ்தாவேஜை ரிஜிஸ்த்ரேஷனுக்குச் சரியான பேர்வழியால் தாக்கல் செய்யாதிருத்தல்; (ரி. ஆக். செக். 32. 33. 40 & 43.)

(g) எழுதிக்கொடுப்பவர்களும், ஏஜண்டு முதலான பிரதிநிதி ஹோதாக்களையனுசரித்து ரிஜிஸ்தர் செய்துகொள்ளக் கோருகிறவர்களும் குறித்தடயத்தில் ஆஜராகி தஸ்தாவேசு தாக்கல் செய்யாதிருத்தல்; (ரி. ஆக் செக் 34.)

(h) பார்ட்டிகள் இன்னார் என்று ரிஜிஸ்த்ரேஷனுபீசருக்கு திருப்திகரமான ருசு ஏற்படாதிருத்தல்; (ரி ஆக். செக். 34. 43.)

(i) தஸ்தாவேஜை ரிஜிஸ்த்ரேஷனுக்கு ஆஜர் செய்ய அக்கில்லாத நபரால் தாக்கல் செய்யப்படுதல்; (ரி. ஆக். செக். 34. 40.)

(j) தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்ததாகக் காணப்பட்ட நபர் அல்லது அவருடைய ஏஜண்டு இவர்களால் மேற்படி தஸ்தாவேசு எழுதிக் கொடுத்ததாக ஒப்புக்கொள்ளப்படாதிருத்தல்; (ரி. ஆக். செக். 35.)

(k) எழுதிக்கொடுத்த நபர் மைனராகவாவது, பைத்தியகாரனாகவாவது இருத்தல்; (ரி. ஆக். செக். 35.)

(l) தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்த நபர் இறந்துபோய் அவனுடைய வார்சுகள் அப்படி எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளாதிருத்தல்; (ரி. ஆக். செக். 35.)

(m) யாதொரு தஸ்தாவேசு எழுதிக்கொடுத்ததாய்ச் சொல்லப்பட்ட நபர் இறந்துபோனதாய் தக்க ருசு செய்யப்படாதிருத்தல்; (ரி. ஆக். செக். 35, 41.)

(n) எழுதிக்கொடுத்த நபர் இறந்துபோன பிறகு தாக்கல் செய்ய நேரிடும் உயில், அல்லது தத்தஸ்வீகார பத்திரம் இறந்துபோன நபரால் எழுதிக்கொடுக்கப்பட்டது உண்மைதான் என்று தக்கபடி ருசு செய்யப்படாதிருத்தல்; (ரி. ஆக். செக். 41.)

(o) உயில்களடங்கிய கவர்ஸீல் செய்யப்பட்டிராவிட்டாலும், உயில் எழுதிவைத்தவர்களுடைய பெயர் (இருந்தால்) அவர்களுடைய ஏஜண்டின் பெயர், தஸ்தாவேஜின் சுவபாவம், இவைகள் அந்தக்கவரின்பேரில் எழுதப்படாதிருத்தல்; (ரி. ஆக். செ. 42.)

(p) தஸ்தாவேசுகளுக்குச் செலுத்தப்படவேண்டிய பீசும், அபராதமும் செலுத்தப்படாதிருத்தல் ; (ரி. ஆக். செ. 24, 34.)

(q) விக்கிரய பத்திரங்கட்கு அடியில் குறிக்கப்பட்டிருக்கிற (a), (b) ஷிடியூல்களின்படி ஸ்டாம்பும், ரிஜிஸ்த்ரேஷன் பீசும் தெரிந்துகொள்ள வேண்டியது.

(1) ஸ்டாம்பு விவரத்தைக்காட்டும் ஷிடியூல்.

தொகை.	முத்திரைத் தீர்வை.		ஷரா.
	ரூபா.	அ.	
ரூபாய் 50 வரையில் ...	...	8	ரூபாய் 1000-க்கு மேல் அதிகப்படும் ஒவ்வொரு 500-ரூபாய் அல்லது அதின் பாகத்திற்கு ஐந்து ரூபாய் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியது. ஸ்டாம்பு ஆக்டு ஷிடியூல் 1, ஆர்டிகிள் 23. (Article 23, Shedule1, of Stamp Act.)
,, 50-க்குமேல் ரூபா 100-வரையில்.	1	0	
,, 100 ,, ,, 200 ,, ...	2	0	
,, 200 ,, ,, 300 ,, ..	3	0	
,, 300 ,, ,, 400 ,, ...	4	0	
,, 400 ,, ,, 500 ,, ...	5	0	
,, 500 ,, ,, 600 ,, ...	6	0	
,, 600 ,, ,, 700 ,, ...	7	0	
,, 700 ,, ,, 800 ,, ...	8	0	
,, 800 ,, ,, 900 ,, ...	9	0	
,, 900 ,, ,, 1000 ,, ...	10	0	

(2) ரிஜிஸ்திரேஷன் பீசு விவரத்தைச்காட்டும் ஷிடியூல்.

தொகை	பீசு.		ஷரா.
	ரூபா.	அ.	
ரூபாய் 25-வரையில் ...	0	8	ஆயிர ரூபாயிக்கு மேற்பட்டு பிரதி ஆயிர ரூபாய் அல்லது அதனபாகத்திற்கு ரூபாய் ஒன்று வீதம் அதிகபபடுத்திக் கொள்ள வேண்டியது.
,, 25-க்குமேல் ரூபாய் 50-வரை	0	12	
,, 50 ,, ,, 100 ,, ...	1	0	
,, 100 ,, ,, 300 ,, ...	1	8	
,, 300 ,, ,, 600 ,, ...	2	0	
,, 600 ,, ,, 1000 ,, ...	3	0	

18. விக்கிரய பத்திரம் எழுதும் மாதிரி.

நிலத்தைப்பற்றிய கிரய சாசனம்.

19......ளு ....மீ ......உ ....டிஸ்திரிக்ட்டு ....தாலூகா ....கிராமத்திலிருக்கும் ....ஜாதி ....தொழில்..................................குமாரன் ....க்கு

..............................டிஸ்திரிக்ட்டு ....தாலூகா ....கிராமத்தி
லிருக்கும்...............ஜாதி ....தொழில் ....குமாரன்
..............................எழுதிக்கொடுத்த விக்கிரய பத்திரம்......... . ...
டிஸ்திரிக்ட்டு..............................தாலூகா.................. சப் டிஸ்திரிக்ட்டு.........
கிராமத்தில்......................வம்ச பாரம்பரியமாய் எனக்குச் சொந்தமான என் சுவா
தீனத்திலிருக்கும் (a) (அடியில் குறிப்பிட்டதைப் பார்க்க) என்பேரால் பட்டா
ஏற்பட்டிருக்கும் (b) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப்பார்க்க) நாளது வரையில்
நான் சாகுபடி செய்துவருகிறதுமான (c) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப்பார்க்க)
இதனடியில் கண்ட ஜாபிதாவில் சொல்லப்பட்ட நஞ்சை (d), (e) (அடியில் குறி
ப்பிட்டிருப்பதைப்பார்க்க) நிலங்களை ஜலதரு பாஷாண நிதி நிக்ஷேப மரவடை
மாவடை வகைருக்கள் உள்பட (f) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க) நா
ளது தேதியில் தங்களுக்கு (g), (h) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க)
ரூபாய்க்கு விக்கிரயஞ்செய்து ஷை சொத்தை இப்போதே தங்கள் சுவாதீனஞ்செய்
திருக்கிறேன். (i) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க,) ஆகையால் மேற்படி
நிலங்களுக்கு சர்க்கார் தீர்வை முதலானதுகளைத் தாங்களே செலுத்திக்கொண்டு
புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தானாதி வினிமயவிக்கிரயங்களுக்கு யோக்கிய
மாய் ஆண்டனுபவித்துக் கொள்ளவேண்டியது. (j) (அடியில் குறிப்பிட்டிருப்ப
தைப் பார்க்க) மேற்படி கிரயத்தொகை முழுவதும் நாளது தேதியில் நான் ரொக்
கம் பெற்றுக்கொண்டேன். (k) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க) ரிஜிஸ்
ட்ரேஷன் காலத்தில் பட்டாதங்கள்பேரால் செய்துவைப்பேனாகவும்; மேற்படி
சொத்துக்களைத் தாங்களனுபவிப்பதில் நானாவது என் வார்சுகளாவது எப்போ
தும் எவ்விதமான தகாதாவுஞ் செய்கிறதில்லை. மேற்படி சொத்துக்களின்பேரில்
ஈடு, போக்கியம் முதலிய வில்லங்கங்களில்லை யென்று உறுதியாய்ச் சொல்லுகி
றேன். அப்படிக்கிருந்தால் நானும் என் வார்சுகளும் பாத்தியப்படுவோமாகவும்:
மேற்படி சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்ட மூலாதிரவுகளை இத்துடன் கொடுத்
திருக்கிறேன். மேற்படி சொத்துக்கு சம்பந்தப்பட்ட ரிஜிஸ்த்ரேஷன் ஆபீசில்
வாங்கப்பட்டிருக்கிற வில்லங்க சர்ட்டிபிகட்டையும் இத்துடன் கொடுத்திருக்கி
றேன். (l) (அடியில் குறிப்பிட்டிருப்பதைப்பார்க்க) இந்தப்படி நான் மனப்பூர்
வமாய் சம்மதித்து எழுதிக்கொடுத்த விக்கிரயதஸ்தாவேசு.

கையெழுத்து.

சாட்சிகள்.

கெட்டெழுத்து.

(a) வேறு விதமாய் பாத்தியம் கிடைத்திருக்கும் பக்ஷத்தில் அந்த விவரம் இவ்விடத்தில் எழுதவேண்டும்.

(b) வேறு ஒருவன் பேரால் பட்டாவாகி யிருந்தால் அந்த விவரம் எழுத வேண்டும்.

(c) வேறொருவருக்கு விட்டிருந்தால் அந்த விவரங்கண்டெழுத வேண்டும்.

(d) நஞ்சை புஞ்சை தோட்டக்கால் கண்டெழுத வேண்டும்.

(e) பட்டா நிலம் மிராசு முதலிய விவரங்கள் எழுதவேண்டும்.

(f) இவைகளை எதையாவது நீக்கிவிடலாம்.

(g) இலக்கத்தில் எழுதவேண்டும்.

(h) எழுத்தால் எழுதவேண்டும்.

(i) விக்கிரயம் வேறே காலத்திலிருந்து அமுலுக்கு வருவதாயிருந்தால் அந்த காலத்தைக் காணவேண்டியது.

(j) இவ்கெதையாவது நீக்கி விடலாம்.

(k) கிரயத்தொகை முழுவதிலுமாகிலும், கொஞ்சமாகிலும், ரிஜிஸ்த்ரேஷன் காலத்திலாவது வேறு எப்பொழுதாவது, வேறு விதமாயாவது, வேறொருவர் வசமாயாவது, செலுத்துவதாய் ஏற்பாடு செய்துகொண்டிருந்தால் அந்த விவரங்கண்டெழுத வேண்டும்.

(l) இந்த நிலங்களுக்குள்ள பாய்ச்சலாதாரத்தைப் பற்றியும், இந்த தஸ்தாவேஜு ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங் காலத்தைக் குறித்தும் ஏதேனும் நிபந்தனைகளிருந்தால் அவைகளைக் கண்டெழுத வேண்டியது.

சோத்து விபரம்.

சப் டிஸ்திரிக்ட்டு.	கிராமம்.	அயன் தல்லெகு	இனும்.	நஞ்சை புஞ்சை விவரம்.	சர்வே நிம்பர்.		விஸ்தீரணம்.		நான்கெல்லை.				சர்வையான நிலங்களுக்குசர்வைநீர் கொடுத்தால் போதும்; ஜமீன், இனும், சுரோத்திரியம் நிலங்களானல் பைமாஷ்நிம்பரும் நான்
					நிம்பர்.	லெட்டர்.	ஏ	டி.	கிழக்கு	மேற்கு	தெற்கு	வடக்கு	

கெல்லையும் நிலத்தின்பேரும், கொடுக்கவேண்டும்.

மனைவிக்கிரய மெழுதுகிற மாதிரி.

Sale deed of House.

19 ஹூ...மாதம் என்று (மேற்கண்ட விவரப்படி எழுதிக்கொண்டு) எழுதிக்கொடுத்த மனை விக்கிரய பத்திரம். ......டிஸ்திரிக்ட்டு......தாலூகா......ஸப் டிஸ்திரிக்ட்டு......கிராமத்தில்......தெருவு......சிரேணியில் (யூனியனுனல் அதின் நீர், முன்சிபால்டியானல் முன்சிபல் நீர்—வது வார்டு) சம்பந்தமான எனக்குச் சொந்தமான (கிரய மூலமாய்க் கிடைத்திருந்தாலதன் விவரம்) என் சுவாதீனத்திலும் அனுபவத்திலு மிருக்கிறதும், இதற்கு முன்............ரால் வாடகைக்கு குடியிருக்கப்பட்டதும், இப்போது... .....குடியிருப்பதுமான....... நம்பருள்ள இதனடியில் ஷிடியூலில் விவரிக்கப்பட்ட குதிரை லாயம், காடிகானு இரண்டு அந்தஸ்து மெத்தையும், பிழக்கைடையும், தென்னமரம் வகைமுக்கள் சகிதம், ரூ க்கு (எழுத்தால்) ரூபாய்க்கு இதினுல் தங்களுக்கு விக்கிரயஞ் செய்து மேற்படி கிரயத்தொகையில் இப்போது நான் பெற்றுக்கொண்ட ரூபாய் போக பாக்கி.........ரூபாயை ரிஜிஸ்தர் காலத்தில் ரிஜிஸ்தர் ஆபீசில் தாங்கள் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிற படியால் மேற்படி தொகை எனக்குச் சேர்ந்த உடனே ஷை மெத்தை வகைமுக்களை தங்கள் சுவாதீனஞ் செய்யக்கடவேன். அதற்குப்பிறகு மேற்படி வீட்டிற்கு கட்டவேண்டிய யூனியன் முன்சிபல் வரி முதலியவைகளைத் தாங்களே செலுத்திக்கொள்ள வேண்டியது. மேற்படி மனையைத்தாங்கள் புத்திரபவுத்திர பாரம்பரியமாய் தானாதிவினிமய விக்கிரயங்களுக்கு யோக்கியாய் ஆண்டனுபவித்துக் கொண்டு சுகத்திலிருக்க வேண்டியது. மேற்படி மனையின்பேரில் ஈடு முதலிய எவ்வித வில்லங்கமுமில்லை யென்று உறுதி

யாய்ச் சொல்லுகிறேன். அப்படிக்கிருந்தால் நானும் என் வர்சுகளும் பாத்தியப்படுவோமாகவும், ரிஜிஸ்த்ரேஷனுபீசில் வாங்கிய என்கம்பரென்ஸ் சர்ட்டிபிகேட்டும் (Encumbrance Certificate) இத்துடன் கொடுத்திருக்கிறேன். மேற்படி மனையின் மூலாதாரவுகளும் இத்துடன் கொடுத்திருக்கிறேன். இந்தப்படி மனைசுத்தக்கிரய சாசனம் எழுதிக்கொடுத்தேன்.

சொத்து விவரம்.

விவரம்.	நானகெல்லை.				அடி.		கூலாக்கட்டு, கெட்டிமெத்தை காலி மனை விவரம்.
	கிழக்கு.	மேற்கு.	தெற்கு.	வடக்கு	கிளமேலடி.	தென்வடலடி	

கையெழுத்து.

சாட்சிகள்,
நெட்டெழுத்து.

ELECTION OF DHARMAKARTA.

தர்மகர்த்தா நியமனம்.

துறையூர் ஜமீந்தார் மகா-௱-௱-ஸ்ரீ செட்டிகுளம் பிரஸன்ன வேங்கடாசல ரெட்டியார் துரையவர்களை, முசிரி தாலூகா தேவஸ்தானம் கமிட்டியாரவர்கள் துறையூர் தேவஸ்தானங்கட்குப் புதுதர்மகர்த்தாவாகத் தெரிந்தெடுத்திருக்கின்றார்கள். மேற்படி ஜமீந்தாரவர்கள் தமது மானேஜராகிய ம-௱-௱-ஸ்ரீ, அண்ணாமலைப் பிள்ளையவர்களிடம் தேவஸ்தானம் விஷயமாய் ஆலோசித்த பொழுது, மேற்படி பிள்ளையவர்கள் தேவஸ்தான காரியங்களைச் செவ்வையாய் நடத்துவது கஷ்டமென்றும், பொது ஜனங்கள் நன்மைக்கு ஒத்து நடப்பது பிரயாஸமென்றும், தவறினால் அபவாதமும், தெய்வத்ரோகாதி பாபங்கட்குப் பாத்திராக வேண்டுமென்றும் அபிப்பிராயந்தந்தனர். அதற்கு ஜமீந்தார் அவர்கள், தேவஸ்தானங்களை நம்மைப்போன்ற திரவிய சக்தியுள்ள பிரபுக்கள் ஆதரணை செய்தாலன்றி அவைகளைப் பிறரால் நிர்வகிக்க முடியாதென்றும், அனேகம் தேவஸ்தானங்கள் தக்க பிரபுக்களிடமிருந்தும் தற்காலத்தில் சீர்குலைந்திருக்கின்றன வென்னும் வதந்தி யெங்கும் பத்திரிகைகளில் உலாவுகின்றன வென்றும், இந்தத்துறையூர் முதல் பத்து தேவஸ்தானங்களும் நம்முன்னோர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தனவென்றும், இந்ததேவஸ்தானங்கள் நமது பெரியோர்கள் கைவசத்திலிருந்து நீங்கின பிறகுதான் பிறராலபகரிக்கப்பட்டும் போயினவென்றும், இப்போது சில

நாளைக்கு முன் சில விக்கிரகங்களையுஞ் சிலர் கைப்பற்றிக்கொண்டதாய் கேள்விப்படுகிறோமென்றும், மேற்படி தேவஸ்தானத்தின் திருவாபரணங்கள் நமது பெரியோர்கள் நாள் முதல் நம்மிடமிருந்து வருகிறது, அப்படிக்கில்லாத விஷயத்தில் இவைகளும் பிறராலபகரிக்கப்பட்டுப் போயிருக்கலாமென்றும், மேற்படி திருவாபரணங்களை உச்சவ காலங்களில் ஜாமீன் முச்சிலிக்கையின்பேரில் தேவஸ்தானக் காரியஸ்தர்களிடம் கொடுத்து சுவாமிக்குச் சாத்துபடி செய்து திரும்பவும் வரப் பெற்றுக்கொண்டிருக்கிறோமென்றும், நாமிந்த தேவஸ்தானங்களைப் பரிபாலிக்க முயலாமலிருந்தால் நம்முன்னோர்கள் செய்துவந்த தருமத்திற்கு நாம் கேடு சூழ்ந்ததாக முடியுமென்றும் சொல்லி தேவஸ்தான விசாரணையை வகித்து மேற்படி பிள்ளையவர்களால் நடத்தி வருகின்றார்கள்.

துறையூர் தேவஸ்தானங்களில் முந்திய மானேஜர்களுடைய காலத்தில் அபசாரமான துர்வழக்கங்கள் நடந்துவந்தன. அவைகளை ஜமீந்தாரவர்கள் அறவே மாற்றவேண்டுவ தவசியமாயிருத்தலால் அவைகளுள் சிலவற்றை இங்ஙனந் தெரிவிக்கலாயிற்று.

1. சுவாமிக்குப் பூஜார்ஹமாக வாங்கப்படும் சாமான்களில் மட்டமாயுள்ளவைகளையே தேடிப்பார்த்து வாங்குவது ;

2. மகா நைவேத்தியத்துக்கு உபயோகப்படுத்தும் அரிசியில் கல் மண், நெல், உமி, தவிடு இல்லாதபடி நன்றாய்ப் பரிசோதிக்காமலும், கழுநீர் வாங்கி சுத்தி செய்யாமலும் தளிகை பண்ணுவது ;

3. நிர்மாலியப் பிரசாதங்கள் உத்தியோகஸ்தர்கட்குக் கொடுக்கப்படுங் காலத்தன்றி, மற்றைய காலங்களில் பிரசாதங்கட்குச் சரியான சாமான்கள் கொடுக்கப்படாமலிருப்பது ;

4. தேவாலங்களில் கைங்கரியம் பண்ணும் ஊழியக்காரர்கள் அடையத்தகுந்த நிர்மாலியப்பிரசாதங்களை தேவஸ்தான விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் வீட்டுவேலைக்காரர்கட்குக் கொடுக்கும்படி செய்வது ;

5. தேவாலயங்களில் கைங்கரியம் பண்ணும் சிப்பந்திகளையாவது அல்லது அவர்கள் சம்பளத்தையாவது குறைத்து சுவாமி காரியங்களில் குறையுண்டுபண்ணுவது ;

6. தேவஸ்தான உத்தியோகஸ்தர்கட்கு அளவுக்குமிஞ்சின சம்பளத்தைக் ஏற்படுத்திககொண்டு தேவாலய பூஜைக் கட்டளைத் திட்டத்தைக் குறைப்பது ;

7. தாக்ஷிண்ய நிமித்தம் அனுவசியமான உத்தியோகஸ்தர்களை யும், சொந்தவேலைக்காக தேவஸ்தான சம்பளத்தில் சேவகர்களையும் நியமிப்பது ;

8. தேவாலயத்துக்கு வருமானமாயுள்ள நிலவரிக் குத்தகை முதலியவைகளைக் கிரமப்படி வசூல்செய்யாமல் விலையினாலும், அளவி னாலும் நஷ்டமாக சாமான்களை ரயித்துக்களிடம் வாங்குவது ;

9. தேவஸ்தான சிப்பந்திகளில் குற்றஞ் செய்தவர்கள் செய்யாத வர்கள் என்பது ஆராயாமல் தண்டனை விதிப்பது ;

10. சிப்பந்திகளின்மேல் குற்றத்தை பிறர் மாச்சரியத்தினால் சொல்வதைக் கேட்டுக்கொண்டு விசாரணையின்றித் தண்டிப்பது ;

11. தேவாலயத்தில் ஊழியஞ்செய்பவர்களுக்குள்ள வரும்படி களை அப்போதைக்கப்போது கொடுக்கப்படாமலிருப்பதால், அவர்கள் பூஜாத்திரவியங்களைக் கவர்ந்து ஜீவனம் பண்ணும்படி தூண்டுவது ;

12. வரவு செலவு கணக்குகளை மாதமுடிவிலும் வருஷ முடிவி லும் எழுதி முடிக்கச்செய்து பார்வையிட்டு வரவேண்டிய பாக்கிகளை வசூல்செய்யாமல் விட்டுவிடுவது ;

13. தேவாலய வரும்படிகளைச் செலவிட்டு அனுவசியமான சீவில் வியவகாரங்களை இழுத்துவிட்டுக்கொண்டு சுவாமி காரியங்களை நழுவ விடுவது ;

14. தேவாலய ஊழியக்காரர்கள் தாங்கள் சுவாமிக்குச் செய்யும் கைங்கரியங்களை விதிநிஷேதங்களைத் தெரிந்து நடத்திவருகிறார்களா வென்று பரிசீலனை செய்யாமலிருப்பது ;

15. தேவஸ்தான உத்தியோகத்தில் நியமிக்கப்படுபவர்களைப் பல ஜனங்களாலும் விரும்பத்தகுந்த நன்னடக்கை யுள்ளவர்களா வென்று விசாரியாமல் நியமிப்பது ;

16. தாஸிலோலர்களாயும் பேராசைக்காரர்களாயு மிருப்பவர் களை தேவஸ்தான உத்தியோகத்தில் நியமிப்பது ;

17. பிறர் சொல்லுங் கோள் மொழிகளைக் கேட்டுத் தமக்குக் குக் கீழ் வேலைபார்க்கும் சிப்பந்திகளை அனுவசியமான நிர்ப்பந்தஞ் செய்வதுமாம்.

இவைகள்போன்ற அபசாரங்கள் இன்னும் பலவுளவாயினும் அவைகளில் முக்கியமான இவைகளை நிவர்த்திசெய்து தேவஸ்தான விசா ரணை பண்ணுவது தாசில் உத்தியோகஞ்செய்து வந்தவர்களுக்குள் சிறந்த கீர்த்தியைவகித்த ம-ா-ா-ஸ்ரீ, அண்ணாமலைப்பிள்ளையவர்கட்குப் பெரிதல்ல. ஆதலால் அவரையே தமக்குக் கண்போன்ற மானேஜரா

கக்கொண்ட ஜமீன்தார்அவர்கள் இவ்வண்ணம் நடத்திவருவார்களாகில் மிகுதியான புகழையும், ஆயுராரோக்கிய அபிவிர்த்தியையும்அடைந்து சுகிப்பார்களாக. சுபம். சுபம். சுபம்.

டி. பி. வி.

பெருமாள் திருமொழி.

வன்ருளி னிணே.

தநயன் கான்புகத்தசரதன் புலம்பல்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

காம்போதி இராகம்: ஆதி தாளம்.

1. வன்ருளினிணே வணங்கி வளநகரம் தொழுதேத்த மன்னனுவான்.
நின்ருயை யரியணேமே லிருந்தாயை நெடுங்கானம் படரப்போகு
வென்ருள் எம்பிராமாவோ ! உனேப்பயந்த கைகேசி தன்சொற்கேட்டு
நன்ருக நானிலத்தை யாள்வித்தேன் நன்மகனே யுன்னே நானே.

* எம்மிராமாவோ - ஓ. எங்களுடைய இராமபத்திரனே! நன்மகனே - நல்ல குழந்தாய்! வளநகரம் - செல்வமிகுந்த அயோத்தியா பட்டணத்திலுள்ளவர்கள், வன்ருளினிணே-வலிமையுள்ள இரண்டு திருவடிகளேயும், வணங்கித்தொழுதேத்த - விழுந்து நமஸ்கரித்துப் புகழும்படி, மன்னனுவா னின்ருயை - அரசனுக்கும்பொருட்டிருந்த நின்னே, அரியணேமேலிருந்தாயை - சிம்மாசனத்தி லிருந்த உன்னே, உனேப்பயந்த கைகேசி- உனனேப் பிள்ளேயாகக்கொண்ட கைகேசி, நெடுங்கானம் படர - நீண்ட காட்டில் வசிக்கும்படி, போகு என்ருள் - போவென்று சொன்னுள்; தன் சொற்கேட்டு - அவளுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, உன்னே நான் - நானும் உன்னே, நானிலத்தை - குரிஞ்சி, முல்லே, மருதம், நெய்தலென்னும் நான்குவிதமான பூமியை, நன்ருக - செவ்வையாக, ஆள்வித்தேன் - அரசாக்ஷிபண்ணும்படி செய்தேன். (என்செயல் நன்ருயிருக்கிறது !)

2. வெவ்வாயேன் வெவ்வுரைகேட் டிருநிலத்தை
வேண்டாதே விரைந்து வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து வனமே மேவி
நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையு மிளங்கோவும்
பின்பு போக
எவ்வாறு நடந்தனே யெம்பிராமாவோ ! எம்பெருமா
னென் செய்கேனே.

---

* எமது நண்பர் சிலருடைய,வேண்டுகோளின்படி பதவுரையாக எழுதப்பட்டது.

[எம் மிராமாவோ - ஓ, எங்கள் இராமசந்திரா ! எம்பெருமான் - எங்களுக்கும் பெரியோனே! வெவ்வாயேன்-உன்விஷயத்தில் அபசாரமான வார்த்தையைச் சொல்லியதனுல் (கொடுமையுள்ள வாயையுடைய எனது), வெவ்வுரை கேட்டு - கெட்டவார்த்தைகளை அங்கீகரித்து, இருநிலத்தை-பெரியபூமியை, வேண்டாதே-அபேக்ஷிக்காமல், விரைந்து - சீக்கிரமாக, வென்றிமைவாய - பகைவரைச் செயிக்கின்ற சரிய நிறமுடைய, களிறொழிந்து - யானையேற்றத்தைத் தவிர்ந்தும் தேரொழிந்து-இரதம் நடத்துவதை விட்டும், மாவொழிந்து - குதிரையேற்றத்தை இகழ்ந்தும், வனமேமேவி-அரண்யத்தையடைந்து, நெய்வாய்-உதிரநதோய்ந்த, வேல் நெடுங்கண் - வேல்போலும் நீண்ட கணகளையுடைய, நேரிழையும் - இஷ்டமான ஆபரணத்தையணிந்த சீதாபிராட்டியும், இளங்கோவும் - இலக்குமணனும், பின்புபோக - உடன்வர, எவ்வாறு நடந்தனை - எவ்விதமாய்ப் போயினுய், என் செய்கேன் - என்னசெய்வேன்?]

3. கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன் குலமதலாய்,
குனிவில்லேந்தும்
மல்லணைந்த வரைத்தோளா வல்வினையேன் மனமுருக்கும்
வகையேகற்ருய்
மெல்லணைமேல் முன்துயின்ருய் பின்றினிப்போய்
வியன்கான மரத்தின்னீழல்
கல்லணைமேல் கண்டுயிலக் கற்றனையோ காகுத்தா
கரியகோவே.

[கொல் அணை-கொல்லனுலையிற்செய்த, வேல்-வேலாயுதம்போன்ற, வரிநெடுங்கண்-செவ்வரிபரந்தநெடியகண்ணையுடைய, கௌசலைதன்குலமதலாய்-கௌசலை வம்சத்துக்கு புத்திரனே! குனிவில் ஏந்தும்-வளைக்கப்பட்ட கோதண்டத்தைத்தரித்த, மல்லணைந்த - மல்யுத்தம் செய்தற்குரிய, வரைத்தோளா-மலைபோன்றதோள்களையுடையவனே! காகுத்தா-ககுஸ்தனென்னுமரசனது மரபிற்பிறந்தவனே! கரியகோவே-அஞ்சனவண்ண ! வல்லையேன்-கொடும்பாவியாகிய எனது! மனமுருக்கும்-மனஙசரையப்பண்ணுகின்ற,வகையே-விதத்தையே,கற்ருய்-அறிந்திருக்கிருய்; முன்-(நீகாட்டுக்குப்போகு) முன், மெல்லணை மேல்-மெல்லிய புட்ப சயனத்தின் மேல், துயின்ருய் - நித்திரைசெய்தாய் ; இனி இன்று - இனிமேல் இன்றைக்கு, வியன்கானம்போய் - பெரிதாகிய காட்டுக்குச்சென்று, மரத்தின்னீழல் - மரத்தினது நிழலிலே, கல் அணைமேல் - பருக்கைக்கல்லையுடைய (பூமியாகிய) சயனத்தில், கண்துயில் - தூங்குவதற்கு, கற்றனையோ - அறிந்திருக்கிருபோ!]

4. வாபோகு வா இன்னும் வந்தொருகால் கண்டுபோ
மலராள்கூந்தல்
வேய்போலு மெழில்தோளி தன்பொருட்டா விடையோன்றன்
வில்லைச்செற்ருய்
மாபோகு நெடுங்கானம் வல்வினையேன் மனமுருக்கும்
மகனேயின்று

நீபோக வென்னெஞ்ச மிருபிளவாய்ப் போகாதே
நிற்குமாறே.

[மலராள் கூந்தல் - பூக்களை முடித்திருக்கின்ற, வேய்போலும் - பச்சைமூங்கிலையொத்துத் திரண்ட, எழில் தோளிதன் பொருட்டு - அழகுவாய்ந்த தோள்களையுடைய பிராட்டியை மணம்புரியும் நிமித்தம், விடையோன்றன் - விருஷபவாகனத்தையுடைய சிவனது, வில்லைச்செற்றாய் - வில்லைமுறித்தவனே! வா, போகுவாய் - (இவ்விடம்) வந்துவிட்டு பிறகு போகக்கடயாய், இன்னும் வந்து ஒருகால் இன்னும் ஒருமுறை (என்பக்கல்) வந்து, கண்டுபோ - (நான் அடையும் துக்கத்தை)ப் பார்த்துவிட்டுப் போவாயாக; வல்வினையேன் - மிக்கப்பாவியாகிய (என்) மனமுருக்கும் - மனதைக் கலக்கப்பண்ணுகின்ற, மகனே - காதலனே! இன்று - இந்நாளில், மாபோகும் - மிருகங்கள் சஞ்சரிக்கின்ற, நெடுங்கானம் - பெரியகாட்டுக்கு, நீபோக - நீசென்றாய், என்னெஞ்சம் - என்னுடைய இருதயம், இருபிளவாய்ப் போகாதே - இரண்டாகவெடித்துப் பிளந்துபோகாமல், நிற்குமாறே - இருக்கிற விதமென்ன?]

5. பொருந்தார் கைவேல்நுதிபோல் பரல்பாய மெல்லடிகள்
குருதிசோர
விரும்பாத கான்விரும்பி வெயிலுறைப்ப வெம்பசிநோய்
கூரயின்று
பெரும்பாவி யேன்மகனே போகின்றாய் கேகயன்கோன்
மகளாய்ப்பெற்ற
அரும்பாவி சொற்கேட்ட வருவினையே னென்செய்கே
னந்தோயானே.

[பெரும்பாவியேன் மகனே - மகாபாவியாகிய (என்னுடைய) புதல்வனே! பொருந்தார்கை - சத்துருக்கள் கையிலுள்ள, வேல்நுதிபோல் - வேலாயுதத்தினது முனையைப்போல, பரல்பாய - பருக்கைக் கல்லுகள் குத்துவதினால், மெல்லடிகள் - (உனது) மிருதுவான பாதங்களில், குருதிசோர - இரத்தமொழுகும்படி வெயிலுறைப்ப சூரியகிரணஞ்சுடவும், வெம்பசி நோய்கூர - கொடியபசியென்னும் பிணியதிகரிக்கவும், விரும்பாத கான் விரும்பி - ஆசைக்கொள்ளத்தகாத காட்டை இச்சித்து, போகின்றாய் - செல்கின்றாய், கேகயர்கோன் - கேகயதேசத்தாருக் கரசன், மகளாய்ப் பெற்ற - புத்திரியாகப்பிறந்த, அரும்பாவி - செய்தற்கரிய பாபியினுடைய, சொற்கேட்ட - வார்த்தைகளை மேற்கொண்ட, அருவினையேன்யான் - அரிதான பாபமுடைய நான், என்செய்கேன் - யாது செய்வேன்? அந்தோ - ஐயோ!]

6. அம்மாவென் றுகந்தழைக்கு மார்வச்சொல்கேளாதே
அணிசேர் மார்வம்
என்மார்வத் திடையழுந்தத் தழுவாதே முழுசாதே
மோவாதுச்சி
கைம்மாவின் நடையன்ன மென்னடையும் கமலம்போல்
முகமுங்காணாது

எம்மானை யென்மகனை யிழந்திட்ட இழிதகையே
னிருக்கின்றேனே.

[அம்மா வென்று - தந்தையே யென்று, உகந்து அழைக்கும் - விரும்பிக்கூப்பிடுகின்ற, ஆர்வச்சொல் - விரும்பத்தகுந்த சொற்களை, கேளாதே-கேளாமலும், அணிசேர் - அழகுமொருந்திய, மார்வம் - மார்பானது, என் மார்வத்திடை - என்னுடைய மார்பினிடத்தில், அழுந்த தழுவாதே - இறுகக் கட்டிக் கொள்ளாமலும், முழுசாதே - சீராட்டாமலும், மோவாது உச்சி - உச்சிமோக்கப்படாமலும், கைம்மாவின் நடையன்ன - யானையினது நடையையொத்த, மென்னடையும் - மிருதுவான நடையையும், கமலம்போல் முகமும் - தாமரை மலர்போன்றத் திருமுகத்தையும், காணாது - காணமலுமிருக்கும்படி, எம்மானை என்மகனை - எங்கள் பெரியோனாகிய என்னுடைய புதல்வனை, இழந்திட்ட - நீங்கப்பெற்ற, இழிதகையேன்-கீழ்மைக்குணமுள்ள நான், இருக்கின்றேனே - உயிருடன் கூடிய உடலோடு வசிக்கின்றேனே.]

7. பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து
பூந்துகில் சேரல்குல்
காரெழில் விழலுடுத்துக் கலனணியா தங்கங்க
ளழகுமாறி
ஏமருதோ ளென்புதல்வன் யானின்று செலுத்தக்
கவனந்தான் சேர்தல்
தூமறையீ ரிதுதகவோ! சுமந்திரனே! வசிட்ட
னே! சொல்லீர் நீரே.

[ஏமருதோள் - (பார்ப்பவர்கள்) விரும்பச்செய்கின்ற தோள்களையுடைய, என்புதல்வன் - என்னுடைய புத்திரன், பூமருவு நறுங்குஞ்சி - மலர்களைச்சூடிய நல்லசிகையினை, புனைசடையாப்புனைந்து-நெருங்கியசடையாக முருக்கிக்கொண்டு, பூந்துகில்சேர் அல்குல் - அழகிய பீதாம்பர முடுத்த இடைப்பக்கத்தினது, காமர் எழில் - மிக்க அழகை, விழல் உடுத்து - புல்லுக்குவிட்ட நீரைப்போல் பயனற்றதாகச் செய்து, கலனணியாது, ஆபரணங்களைத் தரிக்காமல், அங்கங்கள் - அவயவங்களில், அழகுமாறி - அழகு கெட்டு, யான் இன்றுசெலுத்த - இன்று நான் அனுப்பினதால், வனம்தான் சேர்தல் - வனத்துக்குப் போகுதல், தூமறையீர் - பரிசுத்தங்களான வேதியர்களே! சுமந்திரனே - சுமந்திரனென்னும் பெயருடைய அமைச்சனே! வசிட்டனே - வசிட்டரென்னு மாசிரியனே! இது தகவோ - இந்தக்காரியம் செய்வது சரியா? நீர்சொல்லீர் - நீங்கள் சொல்லுங்கள்.

8. பொன்பெற்று றெழில்வேதப் புதல்வனையும் தம்பியையும்,
பூவை போலும்
மின்பற்று நுண்மருங்குல் மெல்லியலென் மருகியையும்
வனத்தில் போக்கி
நின்பற்று நின்மகன்மேல் பழிவிளைத்திட்டென்னையும்
நின் வானில்போக்க

என்பெற்றாய் கைகேசி ? இருநிலத்திலினிதாக
விருக்கின்றாயே.

[கைகேசீ - கேகயராஜன் புதல்வியே! பொன்பெற்று - ஆபரணங்களைப் புனைந்து, ஆரெழில் - நிறைந்த அழகுடைய, வேதப்புதல்வனையும் - நல்ல நிவினை யுடைய பிள்ளையாகிய இராமனையும், தம்பியையும் - அவன் தம்பியாகிய இலக்கு மணனையும், பூவைபோலும் - நாகணவாய்ப் பறவைபோன்ற, பின்பற்று - கண்ண றிவனுல் உணரப்படாத, நுண் மருங்குல் - நுட்பமான இடையினையுடைய, மெல் லியல் - மிருதுவான சுவபாவமுடைய, என் மருகியையும் - என் மருமகளையும் வனத்தில் போக்கி - காட்டுக்கு அனுப்பிவிட்டு, நின்பற்றும் - உனக்குப் பிரிய முள்ளவனாகிய, நின் மகன்மேல்-உன் பிள்ளையாகிய பரதன்மேல், பழிவிளைத்திட்டு அபவாதத்தை யுண்டுபண்ணி, நீ என்னையும் - நீ என்னைக்கூட வானில், போக்கி - சுவர்க்கத்துக் கனுப்புவதால், என்பெற்றாய் - என்ன சௌக்யத்தை யடையப்போ கின்றாய் ? இருநிலத்தில் - பெரிய பூமியில் இனிதாயிருக்கின்றாய் - சந்தோஷ மாக வாழ்கின்றனையே.

9. முன்னொருநாள் மழுவாளிசிலைவாங்கி யவன்தவத்தை
முற்றும் செற்றாய்
உன்னையுமுன் னருமையையு முன்மோயின் வருத்தமுமொன்
றாக் கொள்ளாது
என்னையுமென் மெய்யுரையும் மெய்யாகக்கொண்டுவனம்
புக்களந்தாய்
நின்னையே மகனாகப் பெறப்பெறுவே னேழ்பிறப்பும்
நெடுந்தோள் வேந்தே !

[முன்னொரு நாள் - முன்பொரு தினத்தில், மழுவாளி - பரசுராமனது, சிலை வாங்கி - வில்லை ஏற்று, அவன்தவத்தை - அவனுடைய தவசை, முற்றுஞ்செற்றாய்- முழுது மழித்தாய், உன்னையும் - உன்னுடைய இளமைப்பருவத்தையும், உன்னரு மையையும் - உன்மேன்மையையும், உன் மோயின் - உன்னுடைய தாயாகியகௌ சலையினது, வருத்தமும் - துக்கத்தையும், ஒன்றாகக்கொள்ளாது - ஒரு பொருளாக மதிக்காமல், என்னையும் - என்னுடைய உயர்வையும், என்மெய்யுரையும் - என்னு டைய சத்திய வசனத்தையும், மெய்யாகக்கொண்டு - உண்மையாகக் கொண்டு வனம்புக்க எந்தாய் - வனத்துக்குப்போன என் தந்தையே! நெடுந்தோள்வேந்தே, நெடியதோள்களையுடைய அரசனே ! ஏழ்பிறப்பும் - எழுவகை பிறப்புக்களினும்- நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன் - உன்னையே புத்திரனாக அடையப்பெறு வேன்.]

10. தேன்நகுமா மலர்க்கூந்தல் கௌசலையும் சுமித்திரையும்
சிந்தைநோவ
கூனுருவில் கொடுந்தொழுத்தை சொற்கேட்டகொடியவள்தன்
சொற்கொண்டுஇன்று
கானகமே மிகவிரும்பி நீதுறந்த வளநகரைத்
துறந்துநானும்

வானகமே மிகவிரும்பிப் போகின்றேன் மநுகுலத்தார்
தங்கள்கோவே !

[மநுகுலத்தார் தங்கள் கோவே-மநுவமிசத்தாருக்குத் தலைவனே! தேன், நடு மா மலர் கூந்தல்-தேன் விளங்குகின்ற பெருமை பொருந்திய கூந்தலையுடைய கௌசலையுஞ் சுமித்திரையும் - கௌசலை சுமித்திரை என்னுமிருவரும், சிந்தை நோவ-மனம் வருந்த, கூன் உருவு இல் கொடும் தொழுத்தை - அழகில்லாதவளை வான தேகத்தையுடைய கொடிய துஷ்டையாகிய மந்தரையினது, சொற்கேட்ட - சொல்லை யுபதேசமாகக் கொண்ட, கொடியவள் தன் சொற்கொண்டு - தீயவளாகிய கைகேசியின் சொல்லைக்கேட்டு, இன்று - இன்றைய தினம், கானகமே மிக விரும்பி - காட்டுக்குப்போகமிகுந்த ஆசைகொண்டு, நீ துறந்த வளநகரை - உன்னால் கைவிடப்பட்ட செல்வமிகுந்த அயோத்திமா நகரத்தை, துறந்து நானும் - நானும் கைவிட்டு, வானகமே மிகவிரும்பி - சுவர்க்கத்துக்குப்போக மிகுந்த ஆசை கொண்டு, போகின்றேன் - செல்கின்றேன்.]

11. ஏரார்ந்த கருநெடுமா லிராமனாய் வனம்புக்க
வதனுக்காற்ரு
தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்றான் புலம்பியவப்
புலம்பல் தன்னை
கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன் குடைக்குல சே
கரன் சொற்செய்த
சீரார்ந்ததமிழ்மாலை யிவைவல்லார் தீநெறிக்கண்
செல்லார்தாமே

[ஏரார்ந்த கருநெடுமால் - அழகுவாய்ந்த கரிய திருமேனியையுடைய திரிவிக்கிரமன், இராமனாய் வனம்புக்கவதனுக்கு - இராமாவதாரமெடுத்துக் காட்டுக்குப் போனதற்காக, ஆற்ரு - சகிக்கக்கூடாத, தாரார்ந்த தடவரைத்தோள் - மாலையணிந்த விசாலமான மலைபோன்ற தோள்களையுடைய, தயரதன் முன்புலம்பிய - தசரதச் சக்கிரவர்த்தியானவன் புலம்பின, அப்புலம்பல் தன்னை - அந்தப் புலம்புதலை, கூரார்ந்த வேல்வலவன் - கூர்மைபொருந்திய வேலுக்கு வல்லவனும், கோழியர்கோன்-சோழராஜாக்களுக் கதிபனும், குடை-வெண்கொற்றக் குடையையுடையவனுமாகிய, குலசேகரன் - குலசேகராழ்வார், செய்த சொல் - இயற்றியருளிய சொற்களையுடைய, சீரார்ந்த தமிழ்மாலையிவை-இந்தச் சிறப்புப் பொருந்திய தமிழால் புனைந்த மாலையாகிய பாடலை, வல்லார்-பாடவல்லவர்கள், தீநெறிக்கண் - நரகத்துன்பத்திற் கேதுவான வழியில், செல்லார் - போகமாட்டார்கள்.]

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

கூரைகள்.

வாட்டக் கூரைகள். (Pitched Roofs.)

கூரைகளின் வாட்டத்தைப்பற்றி யோசிக்குங்கால், பற்பலதேசங்களில் சமயோசிதமாக வெவ்வேறுவித வாட்டம் அமைத்திருப்ப

தாகத் தெரிகிறோம். கிரீஸ் (Greece) ரோம் (Rome) தேசங்களின் கட்டிடங்களிலும், இத்தாலி (Italy) தேசத்துக் கட்டிடங்களிலும், கட்டிடத்தின் அகலத்தின் மூன்றி லொருபங்குக்குச் சமமாக வாட்டம்வைத்துக் கட்டுகின்றனர். இந்தவழக்கம் இங்கிலாந்துசீமையிலும் 12-வது நூற்றாண்டிலிருந்து பிறகு நாளடைவில் வாட்டம் சிறிது அதிகமாகச் செய்தனர். எந்ததேசத்தில் அதிக மழை பெய்கின்றதோ அங்குள்ள வீடுகளின் ஜலதாரைகள் அதிசீக்கிரம் நிரம்பி வீடுகளைக் கெடுதல் செய்யுமாதலால் அங்கே அதிகவாட்டமுள்ளகூரைகள்கூடாது.

அங்ஙனமே எந்ததேசத்தில் சுழல்காற்றாவது அதிக காற்றாவது அடிக்கின்றதோ, அத்தேசத்தில் காற்றின்வேகத்தால் ஓடுகளுக்குக் கெடுதிநேரிடுமாதலாலும், காற்றால் சிலசமயங்களில் ஒருபுறமேகனம் அதிகமாயின் கட்டிடத்துக்குக் கெடுதல்நேரிடுவது சகஜமானதாலும், அந்நாட்டிலுங்கூரைகட்கு அதிகவாட்டங்கொடுப்பது கூடாது; ஆனால்எந்ததேசத்தில் பனி அதிகமாய்ப் பெய்கின்றதோ, அத்தேசத்தின் கூரைகளாதளின் வாட்டம் குறைவாகயிருப்பின் பனியின்கனம் கூரையில்தாக்குலால், அங்குள்ளகூரையின் வாட்டம் அதிகமாகவே யிருத்தல்வேண்டும். கூரையின்மீது மூடப்படுஞ் சாமான் ஈயத்தகடா, துத்தநாகமா, ஓடா, கற்பலகையா என்பதைத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்த வாட்டம் கொடுக்கவேண்டும். சாதாரணமாய் ஈயதகடுமுதலியவைகட்குக் கொடுக்கப்படும் வாட்டத்தைவிட ஓடுகட்கும், சிலேட்டுக்கும் அதிக வாட்டங் கொடுத்தல் வேண்டும். தவிர, மூடப்படும் சாமான்கள் சதுர அடிக்கு எவ்வளவுகனம் ஏற்படுகிறதென்பதைக் கவனித்து வாட்டங்கொடுப்ப தவசியம்.

தாழ்வாரத்தாரிசு:—இதைநமது நாடுகளிலுங்கூட தற்காலமுபயோகிக்கிறார்கள். இதன் உபயோகம் நம்மவர்கட்கு முன்தெரியாததால் அப்போது கட்டத் துணிந்தாரில்லை எனநினைத்தாலும்தகும். இது இராஜாங்கத்தார் கட்டிடங்களிலும், துரைமார்களின் பங்களாக்களிலும், வெகுவாய்க்காணலாம். இத்தாழ்வாரக் கூரையின் வாட்டம் அதின் அகலத்தில் அடி ஒன்றுக்கு காலடி விழுக்காடு கொடுத்தல்வேண்டும்.

தாழ்வாரக்கூரையின் கைமரங்களின் அகலத்தையும், கனத்தையுங் கண்டுபிடிக்கும்வழி:

கைமரங்கள் (Rafters) தாழ்வாரத்தின் அகலத்தின் அடி 1-க்கு ஆறில் ஒருபங்கு $\frac{1}{6}$ அங்குல அகலமும், மூன்றிலொருபங்கு ($\frac{1}{3}$) அங்குல கனமுமாக கணக்கெடுக்க வேண்டியது. இந்தக்காரணத்தாலும

கைமரத்தின் கனம் மூன்றங்குலத்திற் குறையாமலிருக்க வேண்டியது இன்றியமையாதது. நிற்க,

தாழ்வாரத்திற்கு வாரவட்டையின் (Bress Ummer) அகலத்தையும், கனத்தையும் கண்டுபிடிக்கும் விதத்தைப்பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். தாழ்வாரத்தின் ஒரு தூணுக்கும் மற்றொரு தூணுக்குமிடையிலுள்ள அளவையும், தாழ்வாரத்தின அகலத்தையும்சேர்த்துக் கூட்டி, கூட்டி வந்த தொகையைப் பாதியாக்கி அந்தப்பாதித் தொகையில் அடி ஒன்றுக்கு முக்கால் ($\frac{3}{4}$) அங்குலமும், ஒரு அங்குல கனமுமாக வைத்துக் கணக்கிட்டு நிர்ணயித்தல் வேண்டும்,

உதாரணம் :—

தாழ்வாரத்தின் அகலம் 8 அடி என்றும், தூண் அளவு 8 அடி என்றும் வைத்துக்கொள்வோம். மேலே சொன்ன மாதிரி இரண்டையும் (8+8) கூட்ட 16 அடி என்றேற்பட்டது. இதில் பாதி 8 அடி ஆகலால் அடி 1 க்கு $\frac{3}{4}$ அங்குல அகலமாக ஆறங்குலமும், அடி 1 க்கு 1 அடி கனமாக 8 அங்குலமென்று ஏற்பட்டது. ஆதலாலிந்தத் தாழ்வாரத்திற்கு 6 அங்குல அகலமும், 8 அங்குல கனமுமுள்ள வாரவட்டை வேண்டும். இவ்விதம் கணக்கிட்டுவரும் அகலங்களில் $\frac{1}{2}$ க்குக் குறைந்த பின்னங்கள் வரும் பக்ஷத்தில் சில சமயங்களில் அகலத்தையாவது கனத்தையாவது குறைத்து மற்றொன்றில் சேர்ப்பதுவும் வழக்கந்தான். மேலே சொன்னமாதிரி கணக்கெடுத்து கைமரங்களையும் வாரவட்டைகளையும் தயார் செய்து வைத்திருக்கவேண்டும், மரங்களை இடைக்கிடை 15 அங்குல மிருக்கும்படி போடுவதுடன் அம்மரங்களின் ஒரு முனையை சுவரோரத்தில் வைக்கப்பட்ட பலகைத்தாங்கிகளின்மேற் போட்டுள்ள பரம்புச்சட்டத்தின் சுவருக்குள் செல்லும்படி 9 அங்குலத்துக்கு குறையாமல் வைத்தும், மற்றொரு முனையை தாழ்வார அறையாக இருந்தால் சுவரின்மீதுள்ள பரம்புச்சட்டத்தின் மீது வைத்தல் வேண்டும. தூண்கள் நிறுத்திய தாழ்வாரமாயின், தூண்களின்மீதுள்ள வாரவட்டைகளின் மீது வைத்தும், ஆணி அரைதல் வேண்டும்.

இவ்வாறு செய்த பிறகு 2 அங்குல அகலமும் அரை ($\frac{1}{2}$) அங்குல கனமுமுள்ள சிறு மாவரிச்சல்களை 6 அங்குலத்துக்கொன்று நீளத்தில் போட்டு ஆணி அடித்தல் வேண்டும். பிறகு 6 அங்குல அகலம், நீளம் $\frac{1}{2}$ அங்குல கனமுள்ள சுண்ணும்பிற்றேய்த்த தட்டோடுகளை சுண்ணச் சாந்தால் சந்து பதிந்து கூறையின்மேல் போட்டுவர வேண்டியது.

இது போட்ட பிறகு சுமார் 2 அங்குலச்செங்கல் ஜல்லிகளைச்சுண்ணும்புடன் கல்ந்து ஓட்டின்மீது போட்டு நன்றாகக் கெட்டியாகும்படி

வரை தட்டவேண்டியது. இதன்மீது இரண்டு அல்லது மூன்று தடவை பூச்சு வேலை செய்வதுடன் மேல் பூச்சு வேலையை வழவழப்பாகும் வரையும் பூசுதல் வேண்டும். ஜல்லி இல்லாமல்! 3 வரிசைத் தட்டோடுகள் போட்டு முன்போலவே 3 தடவை பூச்சு வேலை செய்வதும் வழக்கந்தான். சுவருக்கு மேலுள்ள கைமரங்களின்மீது போடப்படும் ஓடுகளும், ஜல்லிகளும் சுவருக்குள்ளும் போடப்படவேண்டும். இல்லையாயின் மழை ஜலம் சுவருக்குங் கூரைக்கு நடுவே வழிந்து கட்டிடத்தைக் கெடுத்துவிடும்.

நாற்சதுரமான கட்டிடங்களின் கூரைகள்:—இரண்டு நாற்சதுரமான பக்கங்கள் மேட்டில் சேருவதினாலாவது, இரண்டு முக்கோணம் இரண்டு நாற்கோணம் மேட்டில் சேருங் கூரையினாலாவது உண்டாகின்ற ஒரு சதுரமான கட்டிடத்தின் கூரை தாரிசு இல்லாத விஷயத்தில் முக்கோணமான நான்கு பக்கமுள்ள கூரை ஏற்படும். இதற்கிருபுறமும் சாய்ந்தகூரை (Rent roof) என வழங்குகிறது. முன் சொன்ன இரண்டு நாற்சதுரமான பக்கங்களால் உண்டாகுங் கூரைக்கு (Gable roof) என்னும் பின்சொன்ன இரண்டு முக்கோணம் இரண்டு நாற்சோணத்தால் உண்டாகும் கூரைக்கு (Hepped roof) என்றும் பெயர்.

கைமரக்கூரை (Couple roof):—இரண்டு கைமரங்களைக் கோணமுண்டாகும்படி இணக்கிச் சுவரின்மீது வைப்பதற்கு கைமரக்கூரை என்று பெயர். இக்கூரை 12-அடி அகலமும் அதற்குக் குறைந்துள்ள கட்டிடத்துக்கு உபயோகிக்கலாம்.

சுவரின்மேல் போடப்படும் பரப்புச்சட்டத்தின்மீது கைமரத்தின் கீழ் நுனியை வைத்தும், சுவற்றின் அடியில் ஒரு அடி யிருக்கும்படிக்கும் செய்யவேண்டியது. இவ்விதம் சேர்த்த கைமரங்கள் 15 அங்குலத்திற்கு ஒவ்வொன்ருக போடப்படவேண்டும். இதன்மீது அரைஅங்குலகனமும் இரண்டங்குல அகலமுள்ள மரவரிச்சல்களை 6 அஙகுலத்திற்கு ஒவ்வொன்ருக நெடுக்குவசத்தில கைமரங்களின்மீது ஆணிகளால் இணைக்கவேண்டியது. இவ்விதக் கூரைக்கு வாட்டம் வீட்டின் அகல அளவில் மூன்றிலொருபங்கு $\frac{1}{3}$ இருக்கவேண்டியது. 10. அடி அகலமுள்ள வீட்டின் கைமரங்களை ஒரு சிலாவி (Collar) யாலும் அதற்கு மேற்பட்டு 18 அடி வரையிலும் இரண்டு சிலாவியாலும் இணைக்கவேண்டும். இதற்கு சிலாவிக்கூரை (Collar roofs) என்று பெயர். நமது தேசத்தார் இத்தகைய வீடுகட்குச் சாதாரணமாய் பனைமரத்துண்டுகளைக் கைமரங்களாகக் உபயோகிக்கின்ருர்கள். இக்

கூரைகளின் கைமரங்கள் வீட்டின் அகலத்தின் அடி ஒன்றுக்கு ஆறிலொருபங்கு $\frac{1}{6}$ அங்குல அகலமும், மூன்றிலொருபங்கு $\frac{1}{3}$ அங்குல கனமுமாக கணக்கிடுதல் வேண்டும். எக்காலத்திலும் கைமரங்கள் 3 அங்குல கனத்திற்குக் குறையாமலிருக்கவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

கூரையின் சேர்க்கை மரம் (Hip rafter) வீட்டின் அகலத்தில் அடியொன்றுக்கு நாலிலொருபங்கு $\frac{1}{4}$ அங்குல அகலமும் இரண்டிலொருபங்கு$\frac{1}{2}$ அங்குல கனமுமாக கணக்கிடப்படவேண்டியது.

சாதாரணமாய் இரண்டங்குல அகலமும், 3 அல்லது நாலங்குல கனமுமான சிலாவிகளை உபயோகப்படுத்தவேண்டியது. வீட்டின் அகலம் 18 அடிக்கு மேற்பட்டிருந்தால் தூலக்கட்டைக் கூரைப் போடவேண்டும்.

(இன்னும் வரும்)

S. A.

சமாச்சாரக் குறிப்புகள்

ஆயுசு குறைவதற்குக் காரணமென்ன?:—மனிதரே தங்கள் வாழ்நாளைக் குறுக்கிக் கொள்ளுகிறார்களென்பது ஒரு பிரெஞ்சு ஆசிரியரின் துணிபு. சுத்த ஆகாயத்தில் தேகாப்பியாசஞ் செய்யாதிருப்பதும், நாம் அழிக்கக்கூடியதற் கதிகமாய்ச் சிறு பூச்சிகள் (Microbes) உண்டாகவிட்டிருப்பதும், சாவைப்பற்றிய பயமுமே ஆயுள் குறைவிற்குக் காரணங்களாம். கடைசிக் காரணமே விசேஷித்ததென்கிறார்.

இங்கிலாந்து முழுமைக்கும் பிரதம குருவாகிய காண்டர்பரி ஆர்ச் பிஷப் மகாகனம் டாக்டர் பிரடரிக்டெம்பில் D. D. L. L. D.. நாளது மீ 23உ யிறந்துபோனார். சென்றமீ 4உ லார்ட் சபையில் அவர் பேசுகையில் வியாதிப்பட்டு அதுமுதல் சுகப்படாமலிருந்தார். கடைசிநாளில் தாம் மரித்துப்போவதை முன்னறிந்து யார்க் ஆர்ச் பிஷப்பையும், லண்டன் பிஷப்பையுமழைத்துத் தமக்குப் பரிசுத்த சாக்கிரமெண்டு பரிமாறக்கேட்டு அந்தப்படி உட்கொண்டு மரித்தார். இவர் 1896ளு இந்த உன்னத பிரதம குரு பதவிக்கு உயர்த்தப்பட்டார். இங்கிலாந்தில் மிகுந்த தாழ்ந்த பதவியிலிருந்து உன்னத பதவிக் குயர்ந்தவர்களில் இவரொருவர். இவருக்கு வயது 82. 27உ காண்டர்பரி அத்தியக்ஷ ராலயத்தில் அடக்கஞ்செய்யப்பட்டார்.

திருப்பைஞ்சிலி தேவஸ்தானத்துக்கு இறந்துபோன தர்மகர்த்தா வீரமாச்சாம்பட்டி சுப்பய்யர் அவர்களுடைய ஸ்தானத்தில் ஆங்கரை ம-ா-ா-ஸ்ரீகந்தசாமி

அய்யர் அவர்களை முசிரித்தாலூகா தேவஸ்தானம் கமிட்டியாரவர்கள் நியமித்திருக்கிறார்கள்.

துறையூர் ஜமீன் ஆபீசு மானேஜர் ம-ஈ-ஈ-ஸ்ரீ, எஸ். அண்ணாமலைப்பிள்ளையவர்களையே துறையூர் யூனியன் சேர்மெனாக் இராஜாங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர் ஷை வேலையும் பார்த்துவருவது அவரிடம் இராஜாங்கத்தார்க் கிருக்கும் பழமையான அன்பை நன்கு விளக்குகின்றது. அவருடைய தர்ம சிந்தையை இன்னும் உலகத்தில் நன்கு பிரகாசிக்குமாறுதான் தேவஸ்தான காரியங்களும் அவரை எட்டிப் பார்க்கின்றனபோலும்.

ஒரு சிகரி இடிந்து விழுந்தது :—பங்களூரில் ஸெயிண்டு மார்க்ஸ் சர்ச்சைச் சேர்ந்த 120-அடி உயரமுள்ள மணிச்சிகரி (Bell Tower) இடிந்து விழுந்து போய்விட்டது. அச்சிகரி இந்த வருஷம் ஆகஸ்டுமாதத்தில்தான் கட்டி முடிந்தது. அதனை மறுபடியும் கட்ட ரூபா, 800,000 பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது.

ஆசார சீர்திருத்தச் சபையார் :—24உ ஆமெத பாத்தில் காங்கிரஸ் பந்தலில் ஆசாரசீர்திருத்த சபையார் 16-வது முஸறயாகச் சபை கூடினார்கள். உபசரணைக் கமிட்டிக் காரியதரிசியானவர் பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறி அழைத்த பின்னர் அக்கிராசனத்தை டாக்டர் பண்டார்க்கார் வகிக்கவேண்டுமென்று ஜஸ்டிஸ் சந்தாவர்க்கர் பிரேரேபித்தார். டாக்டர் பண்டார்க்காரும் அக்கிராஸனத்தை வகித்து ஓர் உபந்நியாஸஞ் செய்தரர். அப்பால் சக்கிரவர்த்தி அவர்களுக்கு முடிசூட்டானதைப்பற்றி வாழ்த்துக் கூறினர்.

பெர்ஷியா அரசர் மனைவிமார் :—பெர்ஷியா தேசத்து ஷா அரசருக்கு 1,700 அந்தப்புர ஸ்திரீகளிருந்தனர். இவர் சிறிது காலத்திற்குமுன் ஐரோப்பாவில் சுற்று யாத்திரை செய்து திரும்பியவுடன் 60-ஸ்திரீகளைமாத்திரம் வைத்துக் கொண்டு மற்ற 1640-பேரை நீக்கிவிட்டனராம். இது பரம்பரை பெருமைக்கு விரோதமென்று பிரஜைகளனைவரும் முறுமுறுத்துக் கலகத்திற் கெத்தனிப்பதாய் வதந்தியாகின்றது. ஷா அரசர் சிங்காசன மேறும்போது 1,600-ஸ்திரீகள் இவரது பிதாவினால் மரண சாசனமா யளிக்கப்பட்டனராம்.

சுகாதாரத்தைப்பற்றிய விசேஷக்குறிப்புகள்.

---

14. ஈரமான நிலத்தில் நடமாடுவதினாலும், தாதுவர்க்கம் அல்லது சீவவர்க்கங்களிலிருந்து உண்டாகும் அசுத்தங்களை விலக்காமலுமிருப்பதினால் மலைச்சுவரம்வருகிறது.

15. மழைபெய்து பூமியானது நனைந்திருக்கையில் சுவரம்விருத்தியாகிறது.

16. தேங்கியிருக்கும் நீரை வெளியில்போகவிடாவிட்டால் சுவரங்களும், மண்ணீரலைப்பற்றிய வியாதிகளுமுண்டாகின்றன.

17. தரையில்கிடக்கும் அசுத்தங்கள் கரைந்து பானத்திற் குபயோகிக்கப்படும் கிணறுகளில் சம்மந்தப்பட்டால் அந்நீர் அசுத்தமாம்.

18. பூமியில் அளவிற்குமிஞ்சி யிருக்கும் தண்ணீரானது அத்தரையை ஈரமாகவும், மிகக் குளிர்ச்சியுள்ளதாகவுமாக்கி, அந்நிலத்தின் பமேலுள்ளவாயுவை குளிரச்செய்கிறது; அவ்விடத்தில்வசிக்கும் மனிதர்கட்கு ஜலதோஷம், வாயுரோகம், சுவாசாசயத்தைப் பற்றிய ரோகங்கள் உண்டாகின்றன.

10. அந்த ஈரப்போக்கினால் சுவாசாசயத்தைப்பற்றிய ரோகங்கள் வரமாட்டா.

20. சூடுண்டவாயு குளிர்ந்தவாயுவைக் காட்டிலும் இலேசானது.

21. ஈரமானது சதாரணதூசியையும், வியாதிகட்குக் காரணமாயுள்ள நுண்ணிய ஜீவராசிகளையும் ஆகர்ஷித்துக் கொள்ளுகின்றது.

22. நாம்வசிக்கும் நிலத்தில் நம்முடைய சரீரசுகங்கெடுவற்கு அனேககாரணங்களுள :—

(1) வாயு அசுத்தப்படுதல் ;

(2) வாயு விஷத்தன்மையுள்ள தாதல் ;

(3) குளிர்ச்சி, ஈரம், மூடுபனி இவைகளுடன் வாயு சம்மந்தப்படுதல் ;

(4) நிலத்தின்மேல் ஓடும் நீரானது அசுத்தமா தலாம்.

23. கணவாய்கள் சாதாரணமாக உஷ்ணமாக விருக்கினும், அங்கு வாயுதங்கியும், பூமியீரமாயுமிருக்கும்.

24. அசுத்தவாயு சுத்தவாயுவைக் காட்டிலும் கனமானதாகையால் தாழ்ந்தமட்டத்திற்குவர ஹேதுவாயிருக்கிறது.

EDUCATION OF STATE CHILDREN.

இராஜ மைந்தர்களின் கல்விப்பயிற்சி.

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

" செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறபடி, கற்றவரே சிறந்தவர்களெனத்தெளிவாய் விளங்குகிறது. செல்வத்துளெல்லாம் கல்விச் செல்வமே (செவிச்செல்வம்) செல்வமென்றுங் கூறியிருக்கின்றார். மானிடராய்ப் பிறந்தவர் எவராயினும் கல்வி கற்க வேண்டும்.

" கடை நிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத் துவைக்கப் படும்."

என்று மேலோர் மொழிந்திருக்கிற வாக்கியத்தின்படி, கற்றவர் எங்கும் புகழ் பெறுவார். கல்வி கல்லாதாரை யாருமே மதியார்கள். கல்விகற்கத் தொடங்குகையில் துன்பமாயிருப்பினும், பின்பு அது இன்பம் பயக்கும்.

" அறம்பொரு ளின்பமும் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைக்கொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

" கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக்குக்கழகு செய்வார்."

" கல்வி யழகே யழகு."

" உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனி யாதுகற்ற னன்றே
பிறப்போ ரன்னவுடன் வயிற்றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற்றாயு மனந்திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோருள்ளு
மூத்தோன்வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ்செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் வன்கட்படுமே."

என்று பெரியார் கூறியிருக்கும் வாக்கியங்களின்படி கல்வி கற்பதைவிட பாக்கியம் வேறு ஒன்றுமில்லை. செல்வப்பொருளை மிகுதியாகக் கொண்டவர்களுள் சிலர், தம்மைந்தர்களை கல்வி கற்கவிடாமல், எந்த உத்தியோகத்திற்குப் போய்ப் பணம் சம்பாதித்து யாருக்கென்ன செய்யவேண்டு மென்றும், தமக்கிருக்கும் பொருளை யனுபவித்தால் போதாதா வென்றும், தமக்குள்ளேயேகுதர்க்கஞ்செய்து கொண்டு வீண்காலப்போக்கு செய்யும்படி விடுத்து மூடர்களாக்குகின்றார்கள். இவர்களிற் சிலர் கல்வியினாலாய பயன் இன்னதென்று தெரியாமலும் சிலர் தெரிந்தும் தங்கட்கிருக்கும் செல்வச்செருக்கினாலும் இவ்வண்ணம் தம்மைந்தர்களைப் பாழ்பண்ணுகிறார்கள். தம் கைப்பொருளைச் செலவிட்டுக் கற்றபின் அக்கல்வி மெய்ப்பொருள் விளக்கும். மன மெலிந்த காலத்தில் தைரியத்தை உண்டாக்கும்; அவைக்குச் சென்றால் உலோகோபகாரமாய் பிராணிகளின் குறைவு பாடுகளை எடுத்து உபந்யசித்து நம்முடைய அபிப்பிராயத்தை முந்தியிருக்கச் செய்யும். அதனால் சகலமான ஜனங்களாலும் புகழ்பெற்று இராஜாங்கத்தாராலும் மதிக்கப்பெற்று கீர்த்தியைச்சம்பாதிக்கலாம். உயர்ந்த பரீக்ஷைகளிற்றேறிய சிலர் தம்முடைய கல்வித்திறத்தை நீள உலகில் பரவச்செய்து க்யாதி யடைவதனாலன்றோ இப்போது இராஜாங்கத்தாரால் K. C. S. I., C. I. E. என்று இன்னும் பெரிய பெரிய பட்டங்களைப் பெறுகிறார்கள்.

செல்வ மிகுந்தவர்களில் சிலர் தம்மைந்தர்கள் தமிழ், தெலுங்கு வியாக்கணக்கு இவைகள் கற்றால் போதுமென்றும், வீணே பணச்செலவிட்டு உயர்ந்த பரீக்ஷைகளில் தேறுவதினால் என்ன பயன் என்றும் நினைக்கிறார்கள். அது பிசகான எண்ணம். இராஜாங்கத்தார் நம்முடைய கல்வி அபிவிருத்தியின் பொருட்டு, அளவிடக்கூடாத ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். பற்பல பாடசாலைகளை அங்கங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்ம சுதேச பாஷைகளாகிய தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், இந்துஸ்தானி முதலியவைகளைக் கற்கும்படிக்கும் தாம் ஏற்படுத்தியிருக்கும் F.A., B.A., M.A.; முதலான பரிக்ஷைகளுக்கும் சுதேச பாஷைகளாகிய மேற்கூறியவற்றில் எவரெவருக்கு எந்தெந்த பாஷைகளில் சம்மதமோ அதைக் கற்கும்படி செய்திருக்கிறார்கள். வறியவர்களில் அநேகர் எப்பாடுபட்டாயினும் கல்வி கற்று மேற்கூறிய பரீக்ஷைகளில் தேறி மேலான உத்தியோகங்களைப்பெற்று சுகமடைகிறார்கள். செல்வவந்தர்கள் மேற்கூறிய பரீக்ஷைகளில் தேறினால், உயர்ந்த பதவிகளைப் பெறுவதில் தடையில்லை. ஏனென்றால் அவர்கள் பாரம்பரியமான கனவான்கள் என்றும், அவர்கள் லஞ்ச முதலானதுகள் வாங்கிப் பொருள்பறிக்க விரும்பார்கள் என்றும், நீதியைச் செம்மையாய்ச் செலுத்துவார்களென்றும், நினைத்தே தான் இராஜாங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டபடி உயர்ந்த பதவியடைந்து நன்னீதி செலுத்தி புகழ்பெற்றுவரும் கனவான்களுடைய மைந்தர்களிற் சிலரும் இப்போது உயர்ந்த பரிக்ஷைகளில் தேறி நல்ல பதவியில் இருந்துவருகிறார்கள். வறியர்களாயினும், செல்வர்களாயினும் கல்வியினாலாய பயனை நன்குணர்ந்து கற்பார்களாயின் எல்லா விதத்திலும் மேன்மையடைவதில் ஐயமில்லை. நிற்க.

சுதேச இராஜாங்கத்தார், பாளையகாரர், ஜமீன்தார், ஜாகீர்தார், மிட்டாதார் முதலியவர்களோ வென்றால் மைந்தர்களைக் கல்வியில் பயிற்சி செய்வ

தானது இராஜாங்கத்தில் உயர்ந்த பதவிகளைக்கோரி, உத்தியோகம் பண்ணி, இன்னும் ஏராளமான பொருள்பறிக்க வேண்டியல்ல; தம் தம் சுதேச இராஜாங்கத்தை நன்ருய் நீதி செலுத்தி அரசாட்சி செய்யவே தான்; சுதேச இராஜாக்கள் கல்வி அபிவிருத்தி யடைவார்களானுல் தங்கள் அமைச்சர்கள் மற்றுமுள்ள காரியஸ்தர்கள் இவர்கள் பயந்து தம்தம் வேலையைச் சாவதானமாயும், நியாயமாயும் பார்ப்பார்கள். லஞ்சம் முதலானது வாங்கிப்பொருள் பறிக்கவும் இராஜாங்கத்தில் பொய்க்கணக் கெழுதி வைத்து அதற்கிதற்கென்று சொல்லி ஏமாற்றிப்பொருளை அபகரிக்கவு முடியாதல்லவா? இம்மாதிரி சில சுதேச இராஜாங்கங்களையும் நம்கண்கள் முன்னிலேயிலேயே, சிற்றரசர்கள் அவரவர்கள் மூடத்தனத்தினுலே வீண்வழக்குகளை சிலர் தூண்டுதலினுல் வருவித்துக்கொண்டு, ஏராளமான பொருளைச் செலவுசெய்தும், தம்தம் காரியஸ்தர்களுடைய தேன்மொழிகளைப் போன்ற நய வஞ்சக மொழிகளைக்கண்டுநம்பி, அவர்கள் ஏமாற்றிப் பொருளை யபகரிக்கத் தங்களை மயக்குகிறார்களென்று தெரியாமலே தம்பொருளைப் பகற் கொள்ளைக்காரருக்குப் பறிகொடுப்பதைப் போல் அவர்கட்குப் பறிகொடுத்தும், கடையில் தம்செல்வங்களையெல்லாம் கடன்காரர்களுடைய சுவாதீனப்படுத்தி இழந்தும் இருக்கிருர்களே! ஐயோ! ஏன் இந்த கஷ்டம்! கல்விப்பொருளில்லாம லல்லவா, தம்செல்வத்தைக்காப்பாற்றமுடியவில்லை. தம் ஏராளமான செல்வத்தைக் கல்வியினுல் காப்பாற்றுவது போல், அஃதின்றி மற்ற எவ்வகை உபாயங்களும் பயன்படாது. சுதேச இராஜாங்கத்தார் கல்வியபி விருத்தியில்லாமையினுல், சுவயமாய் பயிரங்கமான இடங்களில் உலோகோபகாரமானப் பிரசங்கங்கள் செய்யவும், பொதுவான தருமகாரியங்களில் தம்பொருளைச் செலவழிக்கவும், மனம் வராமலும், ஜட்ஜி, கலெக்டர் முதலியவர்களைப் பார்த்துத் தாராளமாய் வார்த்தை யாடவு முடியாமல் அவர்களிடம் பயத்தினுல் கிலி பிடித்துப்போய் தம்தம் அரண்மனையிலேயே அடைந்து கிடக்கின்ருர்கள். தாம் வெளியில் உலாவிச்சென்று பிறருடன் வார்த்தையாடுவது அந்தஸ்துக்குத் தகாத காரிய மென்றல்லவோ நினைத்து இப்படி வீணில் கெடுகின்ருர்கள். இதைப்போல் மதியீனம் வெறென்று மில்லை. இவ்வாறு தம் மைந்தர்களையும் வீணே கெடுக்கவழி தேடுகிருர்களே! அவர்களை யாயினும் பயிரங்கமான பாடசாலைகளில் கற்கவிடுத்து, முன்னுக்குக்கொண்டு வரலாகாதா? அல்லது ஸ்டேட் பாடசாலை என்றேற்படுத்தி தம்மக்களுடன் ஊரிலுள்ள சிலமைந்தர்களும் கல்விகற்க ஏற்பாடு செய்து தர்மத்தைக் கட்டிக்கொள்ளலாகாதா? அம்மாதிரி புதுக்கோட்டை, மைசூர் முதலிய இடங்களிலேயும் (Maharajah's Collage.) மகாராஜா காலேஜ் என்று விளங்கிக் கொண்டிருக்கின்றதல்லவா? குஜராத்திலும் உயர்ந்த வகுப்பினருக்கென்றே போர்ட்டிங்கு ஸ்கூல்கள் ஏற்பட்டிருக்கின்றதாகபத்திரிகைகள் கூறுகின்றனவே!

இராஜமைந்தர்கள் தினம் தவருது பயிரங்கமாய்க்குதிரைசவாரிச் செய்யலாம், சிலசமயங்களில் குதிரைகள் கட்டியசார்டுகளில் பேடாபோகலாம், கல்விபயின்ற கனவான்களுடன் வார்த்தையாடலாம், இராஜமைந்தர்கள் தம்தோழர்களுடன் மதிராஸ் பம்பாய்முதலிய இடங்களுக்குச் சவாரிபோகலாம், தமது வீட்டுக்குள்ளாகவே ப்ளேக்ரௌண்டு (Play ground) ஏற்படுத்திக்கொண்டு சரீரப்பயிற்சிக்காக எவ்விதவேலைகளையும் செய்யலாம். காலஞ்சென்ற நம்மகாராணியார் அவர்

கள்கூட தம்மக்களை ஓர்சமயத்தில் செங்கர்களறுத்து, காளவாய்ப்போடவும், வீடு கட்டவும் கற்பித்ததாக நாம் மேற்படியார்சரித்திரத்தினின்றும் அறிகிறோம். தம் நாட்டில் இராஜாங்க உத்தியோகஸ்தர்களான கெவர்னர் கலெக்டர்முதலிய துரைகள்வந்தால் அவர்களிடம் அன்புபாராட்டி வார்த்தையாடி அவர்களை கௌரவப்படுத்தவேண்டும். அவர்களுக்குத் தமதரண்மனையிலேயே பேடிகொடுக்கச் செய்வதும் மிகவும் நலமானகாரியந்தான், எல்லாரிடத்தும் அன்புபாராட்டி அவரவர்கள் தெரிவித்துக்கொள்ளும் மொழிகளைப் பொருமையாக்கேட்டு தக்க விடையளிக்கவேண்டும். தமது இராஜாங்கத்தின் ஒவ்வொருவிஷயங்களையும் தமது நுண்ணறிவினால் ஆராய்ந்து தமது அமைச்சர்களின் கருத்துக்கும் இணங்கித்தர்ம பரிபாலனம்பண்ண வகைதேடிக்கொண்டு சாச்வதமான கீர்த்தியைச் சம்பாதிக்க விரும்பவேண்டும், அதற்கு முக்கிய சாதகம் கல்வியே.

தப்பான எண்ணம்.

(சிறுவர்கட்கு.)

ஒரு கிழவன் ஒருநாள் தந்திஆபீசுக்குவந்து, மடியிலிருந்து ஓர் கடிதத்தையெடுத்து தந்திஆபீஸரிடங் கொடுத்து, "அவசரசமாசாரம், உடனேபோய்ச் சேரும்படி அனுப்பிவிடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். தந்திஅடிப்பவர் கடிதத்திலுள்ள சமாசாரத்தை அப்பொழுதே அனுப்பிவிட்டு, வழக்கப்படி மேற்படி கடிதத்தை ஓர் பித்தளைக் கம்பியில் மற்றக் கடிதங்களுடன் கோர்த்துவைத்துவிட்டுத் தன் வேலையில் கவனமாயிருந்தார்,

கிழவனோ தந்தியடிக்கும்பொழுது அதிக ஆச்சரியமுற்று அவ்வாபீஸரின் செய்கையை உற்றுநோக்கினபடியே யிருந்தான். அதனால் கிழவன் தந்திஆபீசையே கண்டிருக்கமாட்டானென்று விளங்குகிறது; பிறகும் கிழவன் பித்தளைக் கம்பியிலேயே கவனமாயிருந்தான். அரைமணி சென்றதும் கிழவன், "என்னய்யா! அவசரசமாச்சாரமென்றேனே! உடனே தந்தியிலனுப்பாமல் வைத்திருக்கிறீர்களே!" என்றான். தந்திஆபீஸர் நகைத்து, "பெரியவரே! உம்மவேலை அவசரமென்றே, நான் முன்னமேயே சமாசாரத்தை அனுப்பிவிட்டேனே;" என்று சொன்னான்,

அதற்குக் கிழவன், "அய்யா! நீர் என்னை ஏமாத்த முடியாது; நீர் இன்னும் சமாசாரமனுப்பவில்லை; நீர் என் கடிதத்தைக் கம்பியில் கோர்த்ததுமுதல் நான் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேதானிருக்கிறேன்;" என்றான்.

இதுபற்றியே, "அறிவிலர்க்கறிவிப்பார் தாமறிவிலா ரவரன்றே" என்றவாறு பெரியோர்கள் பக்குவாபக்குவந்தெரிந்து தமக்குத் தெரிந்தவொன்றை பிறருக்குச் சொல்வார்கள்.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பனவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்வார்களென நம்புகிறோம்.

---

1. திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
பரவாவடுதுறை வாழ்பண்பார்—குருமரபுக்
கோர்தீபமாகி யொளிறம்பலவாணப்
பேரானடி யெமக்குப்பேறு.

2. ஆதலினீ யன்னோனடிக்கமலஞ் சென்றிரைஞ்சப்
போதுதியேலஞ்சுகுண சுந்தரா—வாதவருட்
குன்றன்னோ சிதரக்கொண்டிக்கு வலபத்திற்
சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1. வேற்கரசே பென்ன விபுதர்தமைக்காத்தருளும்
பாற்கர சேதுபதித்துரையைப்—போற்றுதியேல்
இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
வன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2. எதுபதிச்செல்வா மென்றெண்ணியிடருழுக்கு
மாதலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சீத
மதிக்குடைக்கீழ் சங்கமதுர மொழிச்சேது
பதிப்பாற் கரதுரை கண்பார்.

ஆற்றுப்படை.

3. அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
பெறு சுகுணசுந்தர நீபெட்பி—னுறுதற்
குரைத்தேவர் பாலெனுலகு புகழ்பாண்டித்
துரைத்தேவர் பாலடைந்து சொல்.

ADVERTISEMENTS : Favourable Rates.—Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 50. English advertisements at As. 6 per line. For other details apply to the Managing Proprietor, "Suguna Sundaram" Office, Turaiyur, Musiri Taluk.

TO OUR SUBSCRIBERS.

The Manager requests those who have not as yet sent in their Subscription, to be pleased to intimate to him their desire of being enlisted by the year or otherwise through a post card and kindly remit the Subscription, within a fortnight from the date of receipt of this issue. In the event of failure to receive the said information or the Subscription, the Manager will be necessitated to despatch the next issue by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

நமது கையொப்பக்காரர்களில் அநேகர் தங்கள் சந்தாத்தொகைகளைச்செலுத்தியும், செலுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். செலுத்தாத ஏனையோர் தங்களைச்சந்தாதாரர்களாக ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டியதற்கும், அல்லது தங்கள் விருப்பத்திற்கிணங்க எவ்விதஞ் செய்யவேண்டுமோ அதற்கும் காலணாகடிதமூலமாய் எம்மீது அன்புகூர்ந்து தெரிவிக்கவேண்டுமாயும், அப்படிப்பத்திரிகை பெற விரும்புவோர் தங்கள் சந்தாத்தொகையை இன்னும் பதினைந்து தினத்திற்குள் தயவு செய்து அனுப்பவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறியபடி காலணா கார்டாவது சந்தாத்தொகையாவது அனுப்பாத பத்திரிகாநேயர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. தபால்மூலமாக அனுப்பப்படும்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office,
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்குஞ் சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.